பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 தை 14 வெள்ளிக்கிழமை (27.01.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :61

வன்செயல் நிறுத்த அறிவிப்பு வந்த கையோடு

புலிகளின் பேராளிகள் மீது மடு.வட முனையில் தாக்குதல்

மேஜர் கபிலன் பலி; மற்றொருவர் காயம்

கிளிநொச்சி, ஜனவரி 27

நோர்வே அனுசரணைக் குழுவின் பங்களிப்பின் கீழ் அமைதிப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக அரச படைகளுக்கு எதிரான சகல வன்முறை நடவடிக்கைகளையும் நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவித்து 24 மணிநேரம் தாண்டுவதற்குள் விடுதலைப் புலிகள்மீது தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டிருக்கின்றது.

இலங்கை இராணுவத்தின் ஒட்டுப்படைகள் மற்றும் புலனாய்வுக் குழுக்கள் இணைந்து நடத்திய இந்தத் தாக்குதலில் நேற்றுக்காலை மட்டக்களப்பில் தமது முக்கிய போராளி ஒருவர் கொல்லப்பட்டதுடன், தமது உறுப்பினரொருவர் படுகாயமடைந்தார் என்று புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

மட்டக்களப்பு - பொலனறுவை எல்லையில் அரச படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள வெலிகந்தைப் பகுதியை ஒட்டி சுமார் ஆறரைக் கிலோமீற்றர் தொலைவில் உள்ள மட்டக்களப்பு வடமுனைப் பகுதியில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கின்றது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் டிராக்டர் ஒன்றில் சென்றுகொண்டிருந்த புலிகள் இயக்க உறுப்பினர்கள் மீதே நேற்றுக் காலை 9 மணியளவில் றொக்கட் லோஞ்சர்கள் (ஆர்.பி.ஜி.) கொண்டு இந்தத் தாக்குதல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

வெடி பொருள்களுடன் 5 இந்திய மீனவர் கைது

கொழும்பு,ஜன.27

கச்சதீவுக்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் வெடிபொருள்களுடன் இந்தியக் கப்பல் ஒன்றை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேகத்துக்குரிய முறையில் நடமாடிய இக்கப்பலை மறித்து கடற்படையினர் சோதனை செய்தனர் என்றும் -

அக்கப்பலில் 60ஆயிரம் ரெட்டினெட் டோஸ் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. என்றும் - கடற்படையினர் தெரிவித்தனர்.

மீன்பிடித்தொழிலை மேற்கொள்ள இவற்றைப் பயன்படுத்தப்போவதாக அக்கப்பலில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் வடக்கு - கிழக்கிலும்

9ஆம் திகதி முதல் 16ஆம் திகதிவரை வேட்புமனுத் தாக்கல் என்று அறிவிப்பு

கொழும்பு,ஜன.27

வடக்கு - கிழக்கு உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கான வர்த்தமானி அறிவிப்பு வெளியாகியிருக்கின்றது.

இதன்படி மாநகரசபைகள், நகரசபைகள், பிரதேசசபைகள் ஆகியவற்றுக்காகப் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை எதிர்வரும் 9ஆம் திகதிமுதல் 16ஆம் திகதி நண்பகல்வரை தாக்கல் செய்யலாம். சுயேச்சைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

அமெரிக்கா, ஐ.நா. வரவேற்பு

வாஷிங்ரன், ஜன.27

இலங்கை அரசுடன் அமைதிப்பேச்சுகளை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் முன்வந்திருப்பதை வெகுவாக வரவேற்றிருக்கிறது அமெரிக்கா.

அதேசமயம் போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக் கடைப்பிடித்து வன்முறைகளைத் தடுத்து நிறுத்துவதற்கு இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் உடனடி நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

நல்லெண்ண சமிக்ஞையாக ஒரு கான்ஸ்டபிள் விடுவிப்பு

கிளிநொச்சி, ஜன.27

தமிழீழ விடுதலைப் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள மூன்று பொலீஸாரில் ஒருவர் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் நல்லெண்ண நடவடிக்கையாக இவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

மன்னாரில் விடுதலைப் புலிகளின் கட்டுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

செய்தியாளர் சுகிர்தராஜனின் பூதவுடல் நேற்று நல்லடக்கம்

சம்மாந்துறை, ஜன.27

இனந்தெரியாத நபர்களால் திருகோணமலையில் கடந்த செவ்வாய்க்கிழமை சுட்டுக் கொல்லப்பட்ட 'சுடர் ஒளி'யின் திருகோணமலை செய்தியாளர் எஸ்.சுகிர்தராஜனின் பூதவுடல் நேற்றுமாலை சம்மாந்துறை வீரமுனை இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பெருந்திரளான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. நேற்று இறுதிக்கிரியைகளில் கிழக்கு மாகாணத்தின் ஊடகவியலாளர்கள் மற்றும் இதர பிரதேசங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள், சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர் சுனந்த தேசப்பிரிய மற்றும் அதன் முக்கியஸ்தர்களென பெருமளவானோர் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

சுகிர்தராஜனின் மனைவியின் ஊரான் வீரமுனையில் சுகிர்தராஜனின் பூதவுடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தபோது பெருமளவிலான மக்கள்

(12 ஆம் பக்கம் பார்க்க)

முஸ்லிம்கள் - சிங்களவர் மோதல் பேருவளை தர்கா நகரில் பதற்றம்

பலர் காயம்; உடைமைகள் அழிப்பு; ஊரடங்கு அமுலில்

கொழும்பு, ஜன.27

பேருவளை தர்கா நகரில் அமைந்துள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்றை நேற்றுமுன்தினம் கொள்ளையிட வந்தவர்கள் எனக் கூறப்படும் சிங்கள இனத்தைச் சேர்ந்த கொள்ளையர்களில் ஒருவர் மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கு முஸ்லிம் - சிங்களவர் மோதல் நிலை உருவாகியுள்ளது.

பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டிக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

சமாதான முயற்சி தொடங்கி 8 வருடங்கள் ஆனால் சாதித்தவையோ மிகச்சொற்பமே;

எரிக் சொல்ஹெய்மின் விசனம்இது

கொழும்பு, ஜன.27

சமாதான முன்னெடுப்புகள் வெற்றியளிக்க வேண்டுமானால் அளவுக்கு அதிகமான பொறுமை தேவை என்று நோர்வேயின் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்திருக்கிறார்.

புரையோடிப்போன இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிலையான சமாதானத் தீர்வொன்றை காணும் முயற்சி 1998ஆம் ஆண்டில் மிகவும் ரகசியமாகவே ஆரம்பமானது. இந்த முயற்சியில் நான் ஈடுபடத்தொடங்கிய பொழுது முயற்சி கைகூடுவதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்று நினைக்கவில்லை. என் முயற்சி ஆரம்பமாகி எட்டு வருடங்கள் முடிந்துவிட்டன. முன்னேற்றம் இவ்வளவு அற்பமான அளவாக இருக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. - என்றும் எரிக் சொல்ஹெய்ம் 'ரோய்ட்டர்' செய்தி நிறுவனத்துக்கு நேற்று அளித்த செவ்வியில் கூறியிருக்கிறார்.

அரசும், விடுதலைப் புலிகளும் ஐரோப்பிய நாடான சுவிற்ஸர்லாந்தில் சந்தித்துப் பேசுவதற்கு இணங்கியதையடுத்து இந்த செவ்வி நேற்று வழங்கப்பட்டது.

பேட்டியில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

'சமாதான முன்னெடுப்புப் பணிகளை நான் முழுநேர அடிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட சிறிலங்கா பொலீஸ் அலுவலரை தமிழீழக் காவல்துறை அதிகாரி ஒருவர் கைலாகு கொடுத்து வழி அனுப்பி வைப்பதையும் கண்காணிப்புக் குழுவின் அதிகாரியோடு அவர் புறப்பட்டுச் செல்வதையும் படத்தில் காணலாம். (படங்கள் : அலங்காரன்)

எமது விடுதலையில் அரசாங்கம் எந்த அக்கறையும் காட்டவில்லை!

புலிகளால் விடுவிக்கப்பட்ட பொலீஸ் அலுவலர் சரத்

யாழ்ப்பாணம்,ஜன.27

பல்வேறு விதமாக தமக்குள் முரண்பட்டுக்கொண்டு - உறுதி மொழிகளை அள்ளி வழங்கிவருகின்ற அரசாங்கமோ, அதனோடு சேர்ந்தியங்கும் கட்சிகளோ எமது விடுதலை தொடர்பாக ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எவற்றையும் இதுவரை எடுக்கவில்லை.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களின் நல்லெண்ணத்தினால் மட்டுமே எனது விடுதலை சாத்தியமானது.

விடுதலைப் புலிகளால் நேற்று விடுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொலீஸ் கான்ஸ்டபிள் கே.எ.டி.சரத் (வயது 40).

மன்னார் பிரதேசத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குள் அத்துமீறி நுழைந்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றின் உத்தரவுக்கமைய தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த மூன்று பொலீஸாரில் ஒருவரான சரத் தலைவர் பிரபாகரனின் பணிப்பின் பேரில் தமிழீழ நீதிமன்றினால் நேற்று விடுவிக்கப்பட்டார்.

விடுதலையான பின்னர் செய்தியாளர்களுக்கு கருத்துத் தெரிவித்த சரத் மேலும் கூறியதாவது:-

எனது விடுதலைக்கு காரணமாக இருப்பவர் தலைவர் பிரபாகரன் தான். அவருடைய நல்லெண்ணத்தினால்தான் இன்று நான் விடுதலையாகி மீண்டும் எனது உறவுகளோடு சேர்ந்து வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, அவருக்குத் தான் நான் நன்றி கூறுகிறேன். அரசாங்கத் தரப்பினரும் ஜே.வி.பி., ஹெல உறுமய போன்ற கட்சிகளும் தமது அரசியல் லாபம் கருதி பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி வருகின்றார்கள். பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பேசுகின்றார்கள். ஆனால், எமது விடுதலைக்காக அவர்கள் ஆக்கபூர்வமாக எந்த நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. அது தொடர்பாக அவர்கள் பேசக் கூட இல்லை. இது எமக்கு பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் தருகிறது.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது அவர்கள் எம்மை நன்றாகவே நடத்தினார்கள்.

எமது உறவினர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். உணவு மற்றும் ஏனைய வசதிகளில் குறை ஏதும் வைக்கவில்லை. செய்திகளை அறிவதற்காக பத்திரிகைகளை கொண்டுவந்து தருவார்கள். தொலைபேசி வசதிகளைக்கூட அவர்கள் எமக்கு வழங்கியிருந்தார்கள்.

இவை எல்லாவற்றுக்குமாக தலைவர் பிரபாகரனுக்கே என்றும் நன்றி கூறுகின்றேன்.

தலைவரின் இந்த நல்லெண்ணச் செயற்பாட்டிற்கு மதிப்பளித்து அரச கட்டுப்பாட்டில் காரணமே இல்லாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்ற தமிழ் இளைஞர்களையும் பொதுமக்களையும் விடுவிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்று கூறினார் பொலீஸ் கான்ஸ்டபிள் சரத். (த)

நிவாரணக் கட்டளைகளை பெறுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்.மாவட்டத்தில் மீன்பிடித் தடையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இம் மாதத்திற்குரிய இலவச உலருணவு நிவாரணம் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் வழங்கப்படவுள்ளது.

பிரதேச செயலர்களால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ள பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழை ஊர்காவற்றுறை ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கே இந்த நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

மேற்குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட ப.நோ.கூ. சங்கங்கள் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை இன்று வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு நல்லிணக்க செயலகத்தில் பெற்று நிவாரண விநியோகத்தை ஆரம்பிக்குமாறு உதவித் திட்டப் பணிப்பாளர் பிரதீபன் கேட்டுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்டத்திலுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களுக்குரிய கடந்த டிசெம்பர் மாதம் வரையான இலவச உலருணவு விநியோகமும் எதிர்வரும் 31ஆம் திகதி முதல் யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து ப.நோ.கூ.சங்கங்கள் மூலம் விநியோகிக்கப்படவுள்ளன.

அதற்குரிய வழங்கற் கட்டளைகளையும் இன்று பெற்றுக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (3-6)

ஜப்பான் நிதி உதவியுடன்

யாழ். கல்வி வலயத்தில் 10 பாடசாலைகள் அபிவிருத்தி

ஜப்பான் சர்வதேச நிறுவனத்தின் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் யாழ்.கல்வி வலயமும் தெரிவு செய்யப்பட்டுள்ளது. கல்வி வலயத்துக்குட்பட்ட 10 பாடசாலைகள் அபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றன.

அகில இலங்கை ரீதியில் இத்திட்டத்தின் கீழ் யாழ்.கல்வி வலயம் உட்பட 5 வலயங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஒவ்வொரு வலயத்தில் இருந்தும் 10 பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்டு, அப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு இந்த நிறுவனம் நிதியினை ஒதுக்கீடு செய்துள்ளது.

யாழ்.கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் இருந்து 10 பாடசாலைகள் தெரிவு செய்யப்படவுள்ளன.

இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த விசேட பிரதிநிதிகள் குழு பாடசாலைகளை மதிப்பீடு செய்து வருகின்றது. அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலேயே 10 பாடசாலைகளும் தெரிவுசெய்யப்படும்.

இப் பாடசாலைகள் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அவற்றிற்கான அபிவிருத்திப் பணிகள் துரிதகதியில் முன்னெடுக்கப்படவுள்ளன என யாழ்.கல்வி வலய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன. (3-12-14)

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனுக்கு பாடசாலையில் அனுமதி மறுப்பு

மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவனை யாழ்.நகரப் பகுதியில் உள்ள தேசிய பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்காக நன்கொடை கோரி அனுமதி மறுக்கப்பட்டதாகத் தெரிவித்து மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஆணைப்பந்தியில் வசிக்கும் தொழிலாளி ஒருவரின் மகன் கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தார்.

இந்த மாணவனை யாழ்.நகரப் பகுதியில் உள்ள பிரபல தேசிய பாடசாலை ஒன்றில் சேர்ப்பதற்காக மாணவனின் தந்தையார் சென்றார் என்றும் -

குறிப்பிட்ட பாடசாலையின் அதிபர் பாடசாலையில் சேர்ப்பதற்கு 25 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்க வேண்டும் என்றும் - இல்லையென்றால் பாடசாலையில் அனுமதி வழங்க முடியாது என்றும் - தெரிவித்தார் என அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அவர் முறையிட்டுள்ளார். இந்த முறைப்பாடு தொடர்பாகப் பாடசாலை அதிபரும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளரும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர் என்று மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக அரச விசாரணை அதிகாரி ரி.சுவேந்திரன் தெரிவித்தார். (3-13-7)

வி.பி. கிண்ணத் தொடர்

இலங்கை அணி மீண்டும் தோல்வி; 5 விக்கெட்டுக்களால் ஆஸி. வெற்றி

அடிலெய்ட், ஜன. 27

அன்ட்ரூ சைமன்ஸ் மற்றும் கட்டிச்சின் உதவியுடன் வி.பி. கிண்ணத் தொடரில் மற்றொரு தடவை இலங்கை அணியை வெற்றி கொண்டுள்ளது ஆஸ்திரேலியா. அடிலெய்டில் நேற்று நடந்த ஆட்டத்தில் 5 விக்கெட்டுக்களால் இந்த வெற்றி பெறப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது. தொடையில் ஏற்பட்ட காயம் காரணமாக சனத் ஜெயசூரிய ஆடவில்லை.

இந்த இலக்கை 9 பந்துகள் மீதமாக இருந்த நிலையிலேயே ஆஸ்திரேலிய அணி அடைந்தது. அதன் கைவசம் 5 விக்கெட்டுக்களும் மீதமிருந்தன.

ஜோகான் முபாரக்கே இலங்கை அணி சார்பில் அதிகூடியதாக 34 ஓட்டங்களைப் பெற்றார். அவருடன் ஆரம்பத் துடுப்பாளராக தரங்க களமிறங்கினார்.

ஆரம்பத்தில் ஒரு விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்தது இலங்கை. ஆனால் ஓட்ட வீதம் மிகக் குறைவாகவே காணப்பட்டது. பின்னர் அன்ட்ரூ சைமன்ஸ், நதன் பிரக்கன், பிராட் ஹொக் ஆகியோர் இலங்கை அணியின் விக்கெட்டுக்களை குறுகிய நேரத்திற்குள் வீழ்த்தினர்.

போதும் போதாமலும் என்ற நிலையில் பந்துகள் துடுப்புக்களை நோக்கி வந்ததால் ஓட்டங்களைப் பெறுவது சிரமமாக இருந்தது. இலங்கை அணியால் தனது இன்னிங்ஸில் வெறும் 10 பவுண்டறிகளையும் 3 சிக்ஸர்களையுமே அடிக்க முடிந்தது.

இலங்கையின் ஆறு துடுப்பாளர்களே 20 ஓட்டங்களைக் கடந்தனர். எந்த ஒருவரும் பொறுப்புடன் நிலைமை உணர்ந்து தமது அதீத திறமையை வெளிப்படுத்தவில்லை.

ஓய்வுக்குப் பின்னர் அணிக்குத் திரும்பியிருந்த அடம் கில்கிறிஸ்ட் அற்புதமாக விக்கெட் காப்பில் ஈடுபட்டார். ஆனால், கட்டிச் சுடன் ஆரம்பத் துடுப்பாளராகக் களமிறங்கிய அவரால் 34 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. கட்டிச் இந்தத் தொடரில் தனது முதலாவது அரைச் சதத்தைப் பூர்த்தி செய்தார். ரிக்கி பொன்டிங்குக்குப் பதிலாக களமிறக்கப்பட்ட பிரட் ஹொட்ஜ் 5 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இந்த ஆட்டத்தில் ஓட்டங்களைப் பெறுவதில் கட்டிச் கடும் சிரமங்களை எதிர்கொண்டார். கடைசியில் [illegible] பந்து வீச்சில் பிடி கொடுத்து ஆட்டமிழந்தார்.

அணி 115 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்த சமயம் களமிறங்கிய டேமியன் மார்ட்டின் (46) மற்றும் சைமன்ஸ் (32) இருவரும் 11 ஓவர்களில் 60 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றனர்.

இருவருமே முத்தையா முரளிதரனின் பந்து வீச்சில் வீழ்ந்தனர். சைமன்ஸ் டீப் மிட் விக்கெட் திசையில் பிடிகொடுத்தும் மார்ட்டின் 'போல்ட்' ஆகியும் ஆட்டமிழந்தனர்.

உள்ளே வந்த புதிய துடுப்பாளர்களான மைக்கல் ஹசேயும் மைக்கல் கிளார்க் ஆகியோர் களம் புகுந்ததும் மலிங்க பண்டார வின் பந்துகள் அவர்களது துடுப்புகளில் பட்டு எகிறின. அவை பிடிகளாகாதபோதும் ஆட்டத்தில் சற்றுப் பரபரப்பை ஏற்படுத்தின. சிலிப் திசையில் களத்தடுப்பாளர்கள் எவரும் இல்லாததால் அவர்கள் தப்பினர்.

அதன் பின்னர் அவர்கள் இருவரும் நிலைத்து நின்று அணிக்கு வெற்றியைத் தேடித்தந்தனர்.

நேற்றைய ஆட்டத்தின் நாயகனாக 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி 32 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்து அணியை வெற்றியடைய வைத்த சைமன்ஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். (ம-ரி)

சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாண நீதிமன்ற எல்லைக்குள் இயங்கும் சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்களுடனான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதிநந்தசேகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

சிறுவர் இல்லங்களில் காணப்படும் குறைபாடுகள், முறைப்பாடுகள் ஆகியன பற்றி இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன.

யாழ்ப்பாண நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சிறுவர் இல்லப் பொறுப்பாளர்கள், நன்னடத்தைத் திணைக்கள உத்தியோகத்தர்கள், சிறுவர் உரிமை மேம்பாட்டு அலுவலர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்புக்குழு அலுவலர்கள் ஆகியோரை இதில் கலந்து கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் செல்வி க.மீரா கேட்டுள்ளார். (3-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் – 222 2030, 222 2083, 222 3837.

மஹிந்தவுக்கு ஒரு பரீட்சைக் காலம்

இனப்பிரச்சினைக்கு அமைதித்தீர்வு காணும் முயற்சியாக சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதாயின் அதற்கான புறச்சூழல் நிலவுவது முக்கியமானது என்பதை இந்தப்பத்தியில் திரும்பத்திரும்பப் பல தடவைகள் சுட்டிக்காட்டி வந்தோம்.

அரசுக்கும், புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகளுக்கு மீண்டும் ஒரு வாய்ப்புக் கருக்கட்டி வரும் சூழ்நிலையில், இந்தப் புறநிலை குறித்து விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் தெட்டத்தெளிவாகச் சுட்டியிருக்கின்றார்.

தீர்வு காண்பதற்கான பேச்சுக்களை முன்னெடுப்பதற்குரிய புற நிலையை எப்படி உருவாக்குவது என்பதுதான் உத்தேச முதல்சுற்றுப் பேச்சின் அடிப்படையாக அமையப்போகின்றது. அதைப் புலிகள் ஏற்கனவே அரசுத் தரப்புக்குத் தெளிவுபடுத்தி விட்டனர்.

'நேரடிப்பேச்சை ஆரம்பிக்க முன்னர் தமிழ் மக்களின் வாழ்க்கையில் இயல்புநிலை தோற்றுவிக்கப்படவேண்டும். தமிழர் தாயகத்தில் நமது மக்கள் அரச இராணுவப் பயங்கரவாதத்துக்குள் சிக்கி அல்லற்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

"மக்களுக்கு நிம்மதியான - அமைதியான - வாழ்வை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். அதற்குப்பிறகுதான் பேச்சு ஒழுங்காக நடக்க முடியும். ஒருமேசையில் அமர்ந்து பேசமுடியும். ஆகவே, சமாதானச் சூழ்நிலைக்குத் தோதான புறநிலையை உருவாக்குவது அரசின் கடமை. அரசு நினைத்தால் - ஜனாதிபதி நினைத்தால் - அரச படைகளுக்குக் கடும் உத்தரவைப் போட்டு,ஒட்டுப் படைகளின் - கூலிப் படைகளின் - அட்டூழியங்களை நிறுத்தச் செய்து, கொலைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, அமைதிச்சூழ்நிலையை உருவாக்கமுடியும்.

"பேச்சுக்குவர - விரைவில் பேச்சை ஆரம்பிக்க - நாங்கள் தயார். ஆனால், உடனடியாக வன்முறைகள் - அதாவது அப்பாவித்தமிழ் மக்களுக்கு எதிராக ஏவிவிடப்படுகின்ற அரச பயங்கரவாத வன்முறைகள் - நிறுத்தப்படவேண்டும். அதன்மூலம் சுமுகமான நல்லெண்ணப் புறச்சூழல் உருவாக்கப்பட வேண்டும். அதனை உருவாக்குவது அரசின் கைகளில்தான் தங்கியுள்ளது.

"முன்பும் இப்படிப்பல பேச்சுகள் நடந்தன.அத்தகைய பல பேச்சுகள் இடையில் முறிந்துபோனதற்கு அரசாங்கம் அப்பாவித் தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தியமைதான் காரணமாக அமைந்தது. திம்புவில் தொடங்கிக் கடைசிப் பேச்சுகள் வரை பல முயற்சிகள் இடையில் முறிந்ததற்கு இதுதான் காரணம்."

– எனச் சுட்டிக்காட்டியிருக்கின்றார் மதியுரைஞர் பாலசிங்கம்.

ஆக, திட்டமிட்டபடி பெப்ரவரி நடுப்பகுதியில் சமாதானப் பேச்சுகள் ஆரம்பமாவதற்கும், அவை தொடர்வதற்கும், அவற்றின் மூலம் ஆக்கபூர்வமான பயன் கிட்டுவதற்கும் அடிப்படை அம்சமாக - முதல் தேவைப்பாடாக - அமையப்போவது களத்தில் பேணப்படப் போகின்ற புறச்சூழ்நிலைதான் என்பது தெளிவு. உத்தேச சமாதான முயற்சிகள் அந்த நல்லெண்ணப் புறச்சூழல் என்ற அத்திபாரத்தில்தான் எட்டப்படவேண்டும் – கட்டப்பட முடியும் – என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி.

இத்தகைய நிலைமையை ஏற்படுத்துவதற்குத் தன் பங்குக்கு உரிய - காத்திரமான - நடவடிக்கைகளை எடுக்கத் தாங்கள் தயார் என்று புலிகள் அறிவித்து விட்டனர்.

அரச படைகளுக்கு எதிரான சகல வன்முறைகளையும் நிறுத்துவதாக விடுதலைப் புலிகள் அமைப்பு நேர்வேக்கும், நோர்வே அரசு ஊடாக இலங்கை அரசுக்கும் உறுதியளித்துள்ளது என்ற தகவலையும் மதியுரைஞர் பாலசிங்கம் வெளியிட்டிருக்கின்றார்.

இந்த அறிவிப்பைச் சாதகமாகப் பற்றிக்கொண்டு, அரசுத் தரப்பும் தன் பங்குக்கு ஆக்கபூர்வமான நட்வடிக்கைகளைப் பதிலுக்கு எடுக்குமானால் முதல்சுற்றுப்பேச்சுகள் சுமுகமாக ஆரம்பிப்பதற்கு வழி பிறக்கும். அந்தப் பேச்சில், சமாதான முயற்சிகளுக்கான புறச்சூழலை மேலும் செம்மையாக்குவதற்கான ஏற்பாடுகளை ஆராய்ந்து, முடிவெடுத்து அவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலம், புறச்சூழலை மென்மேலும் சுமுகமாக்கலாம். அதன் வாயிலாக அமைதித்தீர்வை எட்டுவதற்கான சமாதான முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்துவதற்குரிய புறநிலைகளை உறுதிப்படுத்தலாம்.

மதியுரைஞர் பாலசிங்கம் சுட்டிக்காட்டியமை போன்று அத்தகைய செயற்பாட்டுக்கும், உறுதிப்பாட்டுக்கும் அரசு தயாரா? தமிழ் மக்களுக்கு எதிரான அரச பயங்கரவாதச் செயல்களை அடியோடு தடுத்து நிறுத்தச் செய்து, அதன் மூலம் அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் நகர்த்தும் தனது பொறுப்புணர்வை அரசுத்தரப்பு வெளிப்படுத்துமா?

அமைதிப்பேச்சுமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் தமக்குள்ள பற்றுறுதியை - திடசங்கற்பத்தை - ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செயலில் வெளிக்காட்டி உறுதிப்படுத்துவதற்கு இது ஒரு பரீட்சைக் காலம். அதில் அவர் தேறுவாரா என்பது அடுத்துவரும் நாட்களிலும், வாரங்களிலும் தெளிவாகிவிடும்.

புலனாய்வுப் பிரிவினர் என்று கூறி கொழும்பில் தமிழரிடம் புதுவித வசூல்

தென்மராட்சி,ஜன.27

கொழும்பில் தமிழர்களிடம் தேசிய அடையாள அட்டைகளைப் பறித்து வைத்துக்கொண்டு அவற்றை திருப்பி தர பணம் அறவிடும் கும்பல்கள் நடமாடுகின்றன என்று கூறப்படுகின்றது.

தம்மை புலனாய்வுப் பிரிவினர் எனக் கூறிக் கொண்டு சோதிக்கும் சிலர், அடையாள அட்டையை குறிப்பிட்ட பொலீஸ் நிலையத்தில் வந்து பெற்றுக் கொள்ளுமாறு அடையாள அட்டைக் குரியவரிடம் கூறிச் செல்கின்றனராம். அதனை நம்பி அவர் பொலீஸ் நிலையம் சென்று விசாரித்தால் அங்கு எந்த வோர் அடையாள அட்டையும் வரவில்லை என பொலீஸார் கூறுகின்றனர்.

பின்னர் இரண்டு மூன்று தினங்களில் சம்பந்தப்பட்ட நபரை அணுகும் வேறு சிலர் மூலம் பணம் அறவிடப்பட்டு அடையாள அட்டை மீளளிக்கப்படுகின்றதாம்.

கடந்த புத்தாண்டு தினத்தன்று கொழும்பில் பாரிய அளவில் தேடுதல் நடத்தப்பட்டதன் பின்னர் தமிழர்களிடம் அடையாள அட்டையைப் பறித்துப் பணம் அறவிடும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன எனக்கூறப்படுகிறது.(ஒ-117)

திறந்த பல்கலைக்கு விண்ணப்பித்தோர் அலுவலர்களின் அசிரத்தையால் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். பிராந்திய திறந்த பல்கலைக் கழகத்தினூடாக முகாமைத்துவமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களில் ஐவர் வடபகுதியைச் சேர்ந்தவர்களான அலுவலர்களின் அசிரத்தையால் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கமுடியாது பாதிப்படைந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழகத்தினூடாக 44 பேர் இக்கற்கைநெறிக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவர்களில் அனுமதிப்பரீட்சையின் மூலம் 7 பேர் தெரிவுசெய்யப்பட்டு கொழும்பில் உள்ள திறந்த பல்கலைக்கழகத் தலைமைப் பீடத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

நேர்முகப் பரீட்சை இன்றுவரை இடம் பெறுகிறது. இதற்கிடையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் அசாதாரண சூழ் நிலையால் கொழும்பு செல்வதன் சிரமம் குறித்து திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய இயக்குநர் ச.ஆ.ஞானேந்திரனிடம் முறையிட்டனர். அவர் தலைமைப்பீடத்தில் உள்ள சிரேஷ்ட விரிவுரையாளர் ஒருவரிடம் தொடர்பு கொண்டு நிலைமையை விளக்கினார். சிரேஷ்ட விரிவுரையாளரும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் ஒருவர் ஏனையவர்களின் ஆவணங்களையும் கொண்டுவந்தால் போதுமானது எனக் கூறியுள்ளார்.

இதனையடுத்து பரீட்சார்த்திகளில் இருவர் ஏனையவர்களின் ஆவணங்களுடன் கொழும்பு சென்றனர். கொழும்பில் அவர்கள் இருவரைத் தவிர மற்றைய ஐவரும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவில்லை எனக் கூறி அவர்களது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. நிராகரிக்கப்பட்ட ஆவணங்கள் நேற்று வியாழக்கிழமை யாழ். பிராந்திய அலுவலகத்திற்கு வந்துசேர்ந்துள்ளன.

இன்றைய தினமே நேர்முகப் பரீட்சை முடிவு திகதியாக உள்ளதால் பாதிக்கப்பட்ட ஐந்து பேரும் எதுவும் செய்யமுடியாத நிலையில் உள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை முடிவு திகதியை நீடிப்பதற்கு ஆவன செய்யுமாறு உரிய தரப்புகளிடம் கோரப்பட்டுள்ளது. யாழ். பிராந்திய அலுவலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன. நேர்முகப்பரீட்சையில் தெரிவானவர்களுக்கான கற்கைநெறிகள் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஒ-12)

யாழ்.ஆஸ்பத்திரியில் சூட்டுக் காயத்துடன் வயோதிபர் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

காலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் வயோதிபர் ஒருவர் நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அல்லாரை வடக்கு, மீசாலையைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகராசா (வயது 71) என்ற வயோதிபரே வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார். இவர் நேற்று முற்பகல் 10 மணியளவில் சாவகச்சேரிப் பகுதியில் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தார் என்றும் -

அவ்வேளை அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவரின் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் இவர் காயமடைந்தார் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(ஒ-12-15)

மருத்துவமனையிலிருந்து இரவில் நோயாளர்கள் வெளியே செல்லத்தடை

குருநகர்,ஜன.27

யாழ்.மாவட்டத்தில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இரவு நேரத்தில் நோயாளர்கள் வைத்திய சாலைகளுக்குச் செல்வதில் ஆபத்தை எதிர்நோக்குகின்றனர். இதனைக் கவனத்திற்கொண்டு மகப்பேற்று வைத்திய நிலையங்களில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணிகளை பிரசவத்திற்கு மேலும் சில நாள்கள் ஆகும் எனத் தெரிந்தாலும் வீட்டிற்கு இரவு நேரங்களில் செல்ல அனுமதிக்கவேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ் வரன் யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளுக்கு இது குறித்து அறிவித்துள்ளார்.

(ஒ-51)

உதவாக்கு

நிலையற்றவைகளை ஒதுக்கி நிலை பேறு உடையதை நாடுவது அறிவுடையோர் செயல்.

– மாணிக்கவாசகர்.

நாளை

தை 15
சனிக்கிழமை
28.01.2006
திதி: சதுர்த்தசி
முன்னிரவு: 11.14 வரை
நட்சத்திரம் : பூராடம்
பிற்பகல் : 12.59 வரை
சுபநேரம் : 03.36 – 05.06
ராகுகாலம் : 09.36 – 11.06
(யாவும் பழைய நேரப்படி)

யாழ்.பல்கலை துணைவேந்தரை தெரிவுசெய்ய நாளை வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,ஜன27

யாழ்.பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான வாக்களிப்பு நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இப்பதவிக்கு ஆறுபேர் போட்டியிடுகின்றனர். நாளை இடம்பெறவுள்ள விசேட பேரவைக் கூட்டத்தில் பேரவை உறுப்பினர்கள், துணைவேந்தரைத் தெரிவு செய்வதற்கான வாக்குகளை அளிப்பர். பல்கலைக்கழக பேராசிரியர் ஆர்.குமாரவடிவேல், பேராசிரியர் கே. கந்தசாமி, பேராசிரியர் திருமதி ஆர். மகேஸ்வரன், பேராசிரியர் வி.நித்தியானந்தம், பேராசிரியர் எஸ்.ஆர்.எச்.ஹூல், டாக்டர் வி.எஸ்.இராஜரத்தினம் ஆகிய ஆறுபேர் துணைவேந்தர் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.

(ஒ-12)

கல்வியியற் கல்லூரி அனுமதியிலும் கணனி செயற்பாட்டில் தவறு?

அச்சுவேலி,ஜன.27

இந்த வருடம் கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்களை சேர்க்கும் நடைமுறையில் கணனிச் செயற்பாட்டால் தவறு நேர்ந்திருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

கல்வியியற்கல்லூரி அனுமதிக்காக விண்ணப்பித்திருந்த மாணவி ஒருவருக்கு நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அழைப்புக் கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. இக்கடிதம் கிடைத்தவுடன் அதில் குறிப்பிடப்பட்டிருந்த கிழக்கு மாகாணக் கல்வியியற் கல்லூரிக்கு நேர்முகப் பரீட்சையில் தோற்றச் செய்வதற்கான ஆயத்தங்களில் அந்த மாணவி ஈடுபட்டார். உரிய ஆவணங்களைத் தயாராக எடுத்து வைத்த அவர் குறிப்பிட்ட தினத்தில் புறப்படவிருந்தார்.

இந்த வேளையில் மற்றொரு கடிதம் அவருக்கு அனுப்பப்பட்டது.

அதில் "கணனியில் ஏற்பட்ட தவறால் நேர்முகப்பரீட்சைக்கான அனுமதிக் கடிதம் தவறுதலாக அனுப்பப்பட்டு விட்டது. நீங்கள் உரிய பாடநெறிக்கு தெரிவு செய்யப்படவில்லை. ஆகவே நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றவேண்டாம்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

கடந்த ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் இரசாயன பாடபெறுபேறுகளில் கணனித் தவறால் குழம்பம் ஏற்பட்டதாக அதிகாரிகளே ஒப்புக்கொண்ட நிலையில் மேற்கண்ட சம்பவம் மாணவரிடையே குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

கல்வியியற் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கையிலும் கணனித் தவறால் குளறுபடி ஏற்பட்டிருக்கலாம் என்று அவர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.(ஒ-11)

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்கு தே.அடையாள அட்டை கட்டாயம்

கொழும்பு,ஜன.27

பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பு பரீட்சைகளுக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதத்திலிருந்து தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்படுகிறது.

பரீட்சைகளின்போது ஆள் மாறாட்டம் இடம்பெறுவதைத் தடுப்பதற்கு இது அவசியமாகின்றது என்று பரீட்சைகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுத் தராதர உயர்தர வகுப்பு பரீட்சைகள் 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் திகதி ஆரம்பமாகும். இந்த இடைக்காலத்துல் பரீட்சார்த்திகள் தமது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும்.

தேசிய அடையாள அட்டைகளைப் பரீட்சார்த்திகள் பெற்றுக்கொள்வதில் உதவிபுரியுமாறு கல்லூரி அதிபர்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். உயர்தர வகுப்பு பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவருக்கு முன்னுரிமை கொடுத்து அடையாள அட்டைகளை வழங்கும்படி ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளருக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் கூறினார்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

University of Jaffna - Srilanka
Faculty of Graduate Studies
Master of Arts in Population Development Studies
Academic Year 2005/06 - Batch I

New Admission

Applications are invited for the above fee levying course

Admission Requirements:

Admission is open to all graduates of any recognized university or those with any other qualification and/of experience, which would be acceptable to the Senate of the University of Jaffna.

Duration: One year

Lectures will be conducted in evenings on Weekdays and on Saturday and Sunday.

Medium: Tamil

Admission:

Admission to the course will be made on the basis of an interview conducted by the Faculty of Graduate Studies, University of Jaffna.

Application forms and other details may be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna. either in person or by post, on a payment of Rs.100/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a money order drawn in favour of the Bursar, University of Jaffna. together with a self addressed stamped envelope 23x10 cm in size. Application forms will be issued from 30.01.2006 to 17.02.2006

All completed application forms should be forwarded to the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna, Thirunelvely to reach on or before 28.02.2006.

Registrar.
25.01.2006.

புதிய பிரிவுகள் ஆரம்பம்
HND, MBA

பிற்போடப்பட்ட மேற்படி கற்கை நெறிகளுக்கான புதிய பிரிவுகள் எதிர்வரும் 11.02.2006 தைப்பூசத் தினத்தன்று ஆரம்பமாகவுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அனுமதிகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களும் புதிய பதிவினை மேற் கொள்ள விரும்பும் மாணவர்களும் உடனடியான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

Director
IIS City Campus
 # 181, Navalar Road, Jaffna.
☎ 021 222 8060

எமது ஸ்தாபனத்திற்கு பின்வரு பணிகளுக்கு பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்

1.உதவிக் கலஞ்சியக் காப்பாளர்

தகைமைகள்:
- G.C.E. (A/L) சித்தி
- வயது 20 - 35 இற்கு இடையில்
- முன்னனுபவம் விரும்பத்தக்கது

2. விநியோக உதவியாளர்கள்

தகைமைகள்:
- G.C.E. (O/L) சித்தி
- வயது 20 - 30 இற்கு இடையில்
- விநியோக முன்னனுபவம்
- தேக ஆரோக்கியமுள்ளவர்கள்

விரும்புவோர் 30.01.2006 திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

முகாமையாளர்
லக்ஷ்மி ஏஜென்சி
எஸ் - லோன் விநியோக நிலையம்,
2ஆவது லேன்,
23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக் காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்கும் இடையில் முகவரி அமைந்துள்ளது).

(சி/47536)(18-11-42)

கண்ணீர் அஞ்சலி

எமது சம்பந்தன் கிளினிக் உரிமையாளரின்
பாசமிகு தாய்

சின்னராசா சரஸ்வதி

அவர்கள் 25.01.2006 அன்று இறைபதம் அடைந்த செய்திகேட்டு துயர் அடைவதோடு, அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

574/1,சம்பந்தன் கிளினிக்.
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சம்பந்தன் கிளினிக் ஊழியர்கள்.

(57075)(42-11-18)

கலைப் பிரிவினரும் தாதிகள் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு,ஜன.27

விஞ்ஞான பாடத்தில் தகுதிபெறும் விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை குறைந்து வருவதனால் கலைப்பாடங்களில் சிரேஷ்ட தரத்தில் சித்தியடைந்துள்ளவர்களையும் தாதிகளாகப் பயிற்சியளிப்பதற்குத் தெரிவு செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்திருக்கின்றது. இப்படியான விண்ணப்பதாரிகளுக்கு தாதிகளுக்கான பயிற்சி வழங்குமுன்னர் 9 மாதங்களுக்கு விஞ்ஞானபாட நெறியொன்றை நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடம் 5ஆயிரம் விண்ணப்பதாரிகளை தாதிகள் பயிற்சிக்கு ஈர்த்துக்கொள்ள ஆயத்தமாகியிருந்த போதிலும் 2ஆயிரத்து 500 விண்ணப்பங்கள் மாத்திரமே கிடைத்திருந்தன என்று அமைச்சர் சிறிபால டி.சில்வா தெரிவித்தார்.புதிதாகப் பயிற்சிபெற்று வெளியேறும் 850 புதிய தாதிகளுக்காக நடைபெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் அமைச்சர் உரையாற்றினார்.

தாதிகள் பற்றாக்குறையால்தான் சுகாதார சேவைகளை முன்னெடுப்பது பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறது. தாதிகள் சேவைக்கு ஆள்கள் தட்டுப்பாடு ஏற்படுவதனால்தான் சேவையை திருப்திகரமாக வழங்கக்கூடமுடியாமல் இருக்கிறது என்று அமைச்சர் கூறினார்.

கலைப் பாடங்களில் சித்தியடைந்தவர்களை தாதி தொழிலுக்குச் சேர்த்துக் கொள்வதை ஆட்சேபிக்கும் தாதிமார் சங்கங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சென்று பணியாற்றவேண்டும். அங்குதான் தாதிகள் தட்டுப்பாடு பெரிதாக இருக்கிறது என்றார் அமைச்சர்.

(ப)

31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்	மறைவு
17 - 10 - 1960	27 - 12 - 2005

திருமதி விக்னேஸ்வரி ஜெயக்குமார்

இல்லக் குலவிளக்கே! இனிய முகத்தவளே!
வெல்லம் நிகர்த்த சேய் முவரையும் நின்
நினைவுக்காய் இப்புவியில் விட்டு விட்டு
நிமலனடி சேர்ந்து 31ஆம் நாள் கழிந்தாலும்
நாம் ஆறுவோமோ உன் நினைவைவிட்டு..

72/1, பிரம்படி லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(57080)(26-11-42)

உன்நினைவால் துயருறும்:
தாய் - சி.செல்லம்மா,
கணவர் - சி.ஜெயக்குமார்,
பிள்ளைகள் - செந்து, ஆரு, தேனு.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25 - 12 - 1933

மறைவு
28 - 12 - 2005

அமரர்
கனகசபாபதி தனபாலசிங்கம்

(ஓய்வு பெற்ற நில அளவையாளர் - உரிமையாளர் நல்லூர் பாம் சென்ரர்)

கடந்த 28.12.2005 அன்று எம்மையெல்லாம் மீளாத் துயரில் விட்டுச் சென்ற எமது அன்புத் தந்தையின் மரணச் செய்தி கேட்டு, உதவிகள் பல புரிந்தும் ஆறுதல் கூறியும் தந்திகள், தொலைபேசி என்பன மூலம் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும் மலர்வளையங்கள் வைத்தும் தமது துயரங்களைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

அத்துடன், இன்று [27.01.2006] வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நிகழும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/47527)(12-11)

19, முருகேசர் ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

- குடும்பத்தினர்

வெளிநாட்டு வேலை வாய்ப்பு

மலேசியா, டோகா, கட்டார், டுபாய் ஆகிய நாடுகளில் உடனடி வேலை வாய்ப்பு

ஒரு மாதத்தில் பிரயாணம்

★ **டோகா, கட்டார், டுபாய்**

தச்சுவேலை, மேசன் வேலை, பார்பென்டர்ஸ், எலக்ரீசியன், பிளம்பர், சாரதி, OFFICE BOY, விமான நிலையத் துப்புரவுத் தொழிலாளர், பொதி சுமப்போர்(PORTERS)

★ **மலேசியாவில்**

ஆண்/ பெண் இருபாலாருக்கும்
பின்வரும் துறைகளில் வேலை வாய்ப்பு
சுப்பர் மார்க்கட், கொம்பியூட்டர் கம்பனி,
தையல் வேலை, பொது வேலை,
துப்புரவுத் தொழிலாளர், உதிரிப்பாக உற்பத்தியாளர்

தொடர்பு:

RAINBOW TRAVELS and TOURS
32/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 0777328219, 021 222 3237.

(c/47308) (39.11.42)

மரண அறிவித்தல்

சரவணமுத்து கந்தையா

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், கொய்யாத்தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து கந்தையா நேற்று (26-01-2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அழகம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, வியாழாட்சி, கண்மணி, சின்னம்மா, ஆச்சிமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற பேரம்பலம், சுந்தரலிங்கம், சந்திரபாலா(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2006) வெள்ளிக்கிழமை பி.ப. 2மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, துண்டி இந்து மயானத்திற்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

27/2 துரையப்பா ஒழுங்கை,
ஈச்சமோட்டை றோட்,
யாழ்ப்பாணம்.

(57078)(42-11)

தகவல்:
சுந்தரலிங்கம்
(மகன்)

கோதெண்ணெய் தெறித்துப் பட்டதில் பெண்மணி காயம்

தென்மராட்சி,ஜன.27

கொதிஎண்ணெய்ச் சட்டியை அடுப்பிலிருந்து இறக்கி எடுத்துச் சென்றவேளை கால்தடுக்கி வீழ்ந்த குடும்பப்பெண்கொதி எண்ணெய் முகம், உடம்பு ஆகியவற்றில் தெறித்துப் பட்டதில் காயமடைந்தார். இச்சம்பவம் சாவகச்சேரி சங்கத்தானையில் இடம்பெற்றது. காயமடைந்த பெண் சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டார்.

(ஒ-117)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாதுகாப்புக்காக இடம்பெயர முற்பட்ட கடற்றொழிலாளர் படையினரால் தடுப்பு

கரவெட்டி,ஜன.27

தற்போது நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் இருந்து பாதுகாப்பான இடத்துக்கு இடம்பெயர முயற்சித்த கடற்றொழிலாளர்களைப் படைத்தரப்பினர் தடுத்துள்ளனர் - என்று கூறப்படுகின்றது.

வடமராட்சி வடக்கு திக்கம் இடைத்தங்கல் முகாமில் உள்ள சேந்தாங்குளம் கடற்றொழிலாளர்களே பாதுகாப்பான இடத்துக்கும் செல்லமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளனர்.

இக்கடற்றொழிலாளர்கள் தங்கள் சொந்த இடத்தில் இருந்து 1993 ஆம் ஆண்டு இடம் பெயர்ந்தவர்கள். கடந்த வருடம் இறுதியில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பெரும் பாதிப்படைந்தவர்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ் நிலையால் அச்சமடைந்து இடம்பெயர்ந்து வன்னி போன்ற பாதுகாப்பான இடங்களுக்குச் செல்கின்றனர்.

இந்நிலையில் மேற்படி கடற்றொழிலாளர்களும் தங்கள் பாதுகாப்புக் கருதி இடம் பெயரும் நோக்கில் தற்காலிக வீட்டுத் தள பாடங்களைப் பிரித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். அந்த வேளையிலேயே படையினர் நேரில் சென்று அவர்களைத் தடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-70)

யாழ்.நகர் மைய றோட்டறக்ட் கழகத்தால் நவாலி சிறுவர் இலத்தில் நடத்தப்பட்ட புதுவருட நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது. இல்லச் சிறார்களுடன் றோட்டறக்ட் கழக அங்கத்தவர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

(203)

கால்நடைகளால் வரணிப் பகுதியில் சுகாதாரச் சீர்கேடு

வரணி,ஜன.27

வரணி சந்தைப்பகுதி கால்நடைகளால் அசுத்தப்படுத்தப்படுகின்றன.

இரவு வேளைகளில் வர்த்தக நிலையங்களின் வாசல்களில் தங்கும் கால்நடைகள் அப்பகுதியை அசுத்தப்படுத்துகின்றன. இதனால், சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபை கால்நடைகளைக் கட்டுப்படுத்துமாறு பகிரங்க வேண்டுகோள் விடுத்தும் கால்நடைகளை வளர்ப்போர் இது விடயத்தில் அக்கறை செலுத்தவில்லை என்று கூறப்படுகின்றது.

(ஒ-170)

மலிவு விலையில் தற்காலிக வீடுகள் இடம்பெயரும் மக்கள் விற்பனை

கரவெட்டி,ஜன.27

இடம்பெயர்ந்தவர்களுக்கென அரசசார்பற்ற நிறுவனங்களால் அமைத்து வழங்கப்பட்ட தற்காலிக வீடுகள் பெறுமதியை விட குறைந்த விலையில் விற்கப்படுவதாகக் கூறப்படுகிறது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற யுத்தங்களால் இடம்பெயர்ந்த மக்களுக்கென அரச சார்பற்ற நிறுவனங்கள் தற்காலிக வீடுகளை அமைத்துக்கொடுத்திருந்தன. இவை ஒவ்வொன்றும் தலா சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்று மதிப்பிடப்பட்டவை.

இந்தத் தற்காலிக வீடுகளில் தங்கியிருந்தவற்றில் பல குடும்பங்கள் தற்போது ஏற்பட்டுள்ள உயிரச்சச் சூழ்நிலை காரணமாக பாதுகாப்பான இடம் தேடி இடம்பெயர்ந்து வருகின்றன.

இந்நிலையில் சில குடும்பத்தினர் தாம் தங்கியிருந்த தற்காலிக வீடுகளை பிறருக்கு 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபா வரையான விலையில் விற்கின்றனர் என்று கூறப்படுகிறது.

இடம்பெயரும் குடும்பத்தினர் அவர்கள் தங்கியிருந்த தற்காலிக வீட்டை பிரித்து எடுத்துச்செல்வதற்கு படைத்தரப்பு தடைவிதிப்பதே இதற்குக் காரணம் என்று சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

(ஒ-70)

குடாநாட்டு வெங்காயப் பயிர்களில் இலைச் சுருள் நோய்த் தாக்கம்

கட்டுப்படுத்தும் வழி குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

குடாநாட்டில் பயிரிடப்பட்டுள்ள வெங்காயப் பயிர்களை இலைச் சுருள் நோய் தாக்கி வருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

எனவே பங்கசு நாசினிகளைச் சிபார்சு செய்யப்பட்ட அளவுகளில் பயன்படுத்தி நோயைக் கட்டுப்படுத்துமாறு புத்தூர், உரும்பிராய் பகுதி விவசாயப் போதனாசிரியர் ம.யோகநாதன் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலைச் சுருள் நோய்த் தாக்கம் பரவலாகத் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. இந்நோய் தீவிரமடைய முன்பு சிபார்சு செய்யப்படும் பங்கசு நாசினிகளைப் பயன்படுத்தினால் வெங்காயப் பயிர்களை நோய்த் தாக்கத்திலிருந்து கட்டுப்படுத்தலாம்.

வெங்காய விதையை நடுகை செய்ய முன் 18 கிராம் கோமை பங்கசு நாசினியை 10 லீற்றர் நீரில் கரைத்து 15 நிமிடங்கள் விதை வெங்காயத்தை அதில் ஊறவிட்டு நடுகை செய்யவேண்டும்.

நடுகை செய்த 15 நாள்களில் இருந்து 10 நாள்கள் இடைவெளியில் ஒட்டு நாசியுடன் கலந்து டக்கோனில் பங்கசு நாசினி 30 மில்லி லீற்றரை (ஓர் அவுண்ஸ்) 10 லீற்றர் நீரில் கலந்து அல்லது மங்கோ செப் பங்கசு நாசினியை 20 கிராமை 10 லீற்றர் நீரில் கலந்து பயிர்களுக்கு மாறி மாறி விசிறலாம்.

இதன் பின் 10 நாள்களில் ரொப்சின் பங்கசு நாசினி 10 கிராமை 10 லீற்றர் நீரில் கலந்து பயிர்களுக்கு விசிறலாம். ஈரமான கால நிலை தொடருமாயின் மீண்டும் மங்கோசெப் அல்லது டக்கோனில் பங்கசு நாசினியை குறிப்பிட்ட கால இடைவெளியில் மாறி மாறிப் பயிர்களுக்கு விசிறலாம்.

இலைச் சுருள் நோயின் தாக்கம் கோப்பாய், உரும்பிராய், நீர்வேலி, சிறுப்பிட்டி, நவக்கிரி, புத்தூர், பத்தைமேனி ஆகிய பகுதிகளில் தற்போது அவதானிக்கப்பட்டுள்ளது. - இவ்வாறு அவர் கூறினார்.

(ஒ-11-202)

நான்கு வகைத் திட்டங்களுக்கென உள்ளூராட்சி சபைகளுக்குக் கடனுதவி

யாழ்ப்பாணம்,ஜன.27

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியம் ஊடாக யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளின் பிரதேச அபிவிருத்திக்கு கடன் வழங்கப்படவுள்ளது.

உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியை பிரதம நிறைவேற்று அதிகாரி யு.எம்.ரணவீர இதனை யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

துரித நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 3 மாத காலத் திட்டத்தின் அடிப்படையில் - குடிதண்ணீர், கிராமிய வீதி அபிவிருத்தி, வாராந்த சந்தை திண்மக் கழிவு முகாமைத்துவம் ஆகிய நான்கு திட்டங்களுக்கும் சபைக்குத் தேவையான அளவு நிதி கடன்மூலம் வழங்கப்படவுள்ளது.

தயாரிக்கப்பட்ட திட்டங்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளருக்கும் கொழும்பில் உள்ள உள்ளூர் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கும் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஒ-185)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தின் ஏற்பாட்டில் அழகுக் கலை வர்ணம் பூசுதல் பயிற்சி நெறிகளின் ஆரம்ப வைபவமும் இளைஞர் கொடிதின நிதி மீளளிப்பும் இம்மாத ஆரம்பத்தில் யாழ்.செயலகத்தில் இடம்பெற்றது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உபகரணங்களைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். மன்றத்தின் யாழ். உதவி இயக்குநர் தி.சிவதட்சணாமூர்த்தி, யாழ். செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் கே.குணாளசிங்கம் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர்.

மத்திய மருந்தகம் அமைக்கவென வழங்கிய காணி உரிமையாளரிடம் மீள ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.27

மானிப்பாய் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும் அமைக்க மாகாண சுகாதார சேவைகள் பிரதி பணிப்பாளரிடம் தான் வழங்கிய காணி திருப்பித் தரப்பட்டுள்ளதாக சட்டத்தரணியும் பதில் நீதிவானுமாகிய இ.வசந்தசேனன் தெரிவித் தார்.

இதுகுறித்து அவர்மேலும் தெரிவித்ததாவது:-

மானிப்பாயில் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும் அமைக்க இரண்டாயிரமாம் ஆண்டில் 20 பரப்புக் காணி என்னால் இலவசமாக வழங்கப்பட்டது. ஆனால், 5 வருடங்கள் கடந்த நிலையில் மேற்படி காணி மத்திய மருந்தகம் அமைக்கப் பொருத்தமற்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயன்பாடு அற்று இருந்த அந்தக் காணியை மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் திருப்பிக் கையளித்துள்ளார்.

திருப்பிக் கொடுக்கப்பட்ட இக் காணியில் 4 பரப்பு யாழ்.மாவட்ட கமநல சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கியுள்ளோம். அங்கு நவாலி கமநல கேந்திர நிலையம் அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, 10 பரப்புக் காணி கருத்தரங்கு மண்டபமும் கலாசார மண்டபமும் அமைக்கும் திட்டத்திற்கு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்கு வழங்க உத்தேசித்துள்ளோம்.

இதேவேளை -

மானிப்பாய் மத்திய மருந்தகமும் மகப்பேற்று மனையும் அமைக்க ஆனைக்கோட்டையில் காணி ஒன்று தெரிவுசெய்யப்பட்டபோதும் - இதுவரை எழுத்து மூலம் அக்காணி கையளிக்கப்படவில்லை என்று கூறப்படுகின்றது.

- இவ்வாறு சட்டத்தரணி இ.வசந்தசேனன் தெரிவித்தார்.

(ஒ-185)

உங்கள் விமானப் பயணத்திற்கு!
Aero Lanka
In Domestic Operation
New way of flying
Head office
No.500,Galle Road,
Wellawatte,
Colombo-06
Tel:2505632-3 Fax:2500626
Jaffna office
No.86,PointPedro Road,
Jaffna. Tel:021-2226242
Fax:021-2225600
Branch
No:14,New Market Building
Chavakachcheri
Tel:021-2227979 Fax: 021-2227979
Trinco Office
No.47,Kandy Road,
Trincomalee.
Tel:026-2221519
Fax:026-2221519
யாழ்ப்பாணம் கொழும்பு

குடிதண்ணீர் குழாய்கள் விசமிகளால் சேதம்; தடுக்க உதவுமாறு மக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.27

சாந்தை கிராமத்திற்கு குடிதண்ணீர் விநியோகத்திற்கு பொருத்தப்பட்டுள்ள தண்ணீர்க் குழாய்களை சேதப்படுத்தும் விஷமிகளை கண்டுபிடிக்க பொதுமக்கள் உதவ வேண்டும்.

- இவ்வாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது:

சாந்தைக் கிராமத்திற்கான குடிதண்ணீர் விநியோகம் தொடர்பாக இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சபை மண்டபத்தில் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. சாந்தைக் கிராமப் பிரதிநிதிகளுடனான இச்சந்திப்பில் சாந்தைக் கிராமத்தில் குடிதண்ணீர் பயன்பாட்டை பெறும் குடும்பங்கள் ஒரு நாளைக்கு தலா ஒரு ரூபாவீதம் மாதாந்தம் 30 ரூபா வழங்கும்படி கோரவுள்ளோம். அத்துடன் -

பிரதேச சபையால் புதிதாக அமைக்கப்பட்ட 6 குடிதண்ணீர் தாங்கிகளையும் - அதற்கென பொருத்தப்பட்ட பைப் வசதிகளையும் பாதுகாக்க மக்கள் முன்வரும் பட்சத்திலேயே குடிதண்ணீர் விநியோகத்திட்டம் முழுமையாக செயற்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

(ஒ-185)

சாவகச்சேரியில் உரவிநியோகம்

வரணி,ஜன.27

மானிய விலையில் உரம்பெற விண்ணப்பித்த விவசாயிகளுக்கு ரி.டீ.எம்.உரம் தற்சமயம் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையத்தில் வழங்கப்பட்டு வருகின்றது.

விண்ணப்பித்த விவசாயிகள் உடனடியாக அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். உரம் பெற வருவோர் அடையாள அட்டையை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

(ஒ-170)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புற்றுநோயாளர் காப்பகம் நாளை திறந்து வைக்கப்படும்

நல்லூர், ஜன.27

உடுவில், மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட புற்றுநோயாளர் காப்பகம் நாளை சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் காப்பகத்தினை யாழ்ப்பாணம் அரச அதிபர் கே.கணேஸ், பிரிட்டனில் வதியும் கே.தர்ம குலசிங்கம் ஆகியோர் திறந்து வைப்பார்கள்.

இந்நிகழ்வில் சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, 'கேன்' யாழ்.குழுத் தலைவர் வைத்திய கலாநிதி செல்வி நவமலர் கனகரத்தினம், 'கேன்' பிரிட்டன் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி பி.தயாள சேகரன், யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட தலைவர் டாக்டர் கே.சிவபாலன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன், உடுவில் பிரதேச செயலர் எஸ்.திவாகரன் ஆகியோர் உரை நிகழ்த்துவர்.

இக்காப்பகத்தைத் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் புற்றுநோயாளர்களுக்கான உதவித்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வரும் 'கேன் பிரித்தானிய' நிறுவனம் அமைத்துள்ளது. (203-111)

கலைஞர்களின் விவரங்கள் கலாசாரப் பேரவையால் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவை கலைஞர் விவரத்திரட்டு ஒன்றினை வெளியிடவுள்ளன.

இதற்காக கலைஞர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கலைஞர்கள் அதற்கான விண்ணப்பப் படிவத்தினை யாழ்.பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-190)

காட்டுப் பன்றிகளால் நெற்பயிர்கள் சேதம்

வரணி,ஜன.27

வரணிப் பிரதேசத்தில் உள்ள நெற்பயிர்கள் காட்டுப் பன்றிகளால் அழிக்கப்படுகின்றன.

கடும் வெள்ளம் காரணமாக நெல்வயல்களில் இறங்க முடியாத நிலையில் இருந்த இப் பன்றிகள் வெள்ளம் வற்றியதும் வயல்களில் இறங்கி நெற்பயிர்களை சேதப்படுத்தி வருகின்றன.

இதேவேளை, இப்பிரதேசத்தில் பனம்பாத்திகளையும் கிளறி முழுமையாக அழிவுக்குள்ளாக்குகின்றன. (204-170)

செலவு விவரம் கோரப்பட்டுள்ளது

தென்மராட்சி, ஜன.27

யாழ்.மாவட்ட உள்ளூராட்சி சபைகளினால் கடந்த வருடம் (2005) நடத்தப்பட்ட உள்ளூராட்சி வார நிகழ்வுகளில் ஏற்பட்ட செலவுகளின் விவரங்கள் கோரப்படுகின்றன.

இக் காலப்பகுதியில் விழாவுக்கு ஏற்பட்ட செலவீனங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் சகல உள்ளூராட்சி சபை செயலாளர்களுக்கும் அறிவித்துள்ளார். (203-117)

விற்பனைக்கு

தரமான முறையில் கொங்கிறீற் கற்கள், தூண்கள் 100 அடி நீளம், 40 அடி அகலம் கொண்ட தொட்டிகளில் அறுக்கப்பட்டு பின்னர் நீரில் ஊறவிட்டு விற்பனை செய்யப்படுகின்றன. 1 அடி நீளம், 4'' அகலக் கல்லின் விலை 26/- ரூபா மட்டும். நேரடியாகப் பார்வையிட்டுப் பெற்றுச் செல்லவும்.

இடம்: VNC

கும்பளாவளை பிள்ளையார் கோயில் அருகில், அளவெட்டி மத்தி, அளவெட்டி.

(45944) (26.17.19)

தரம் 4 மாணவர்களின்..

அடைவு மட்டத்தை உயர்த்தும் நோக்குடன் நடத்தப்படும் ஆசிரியர் திரு.வே.அன்பழகன் அவர்களின் விசேட மாதிரிப் பரீட்சைகள் - 2006 முதலாவது பரீட்சை 29.01.2006 ஞாயிறு காலை 9.00 -10.30 மணி வரை. வினாத்தாள்களைப் பெறவிரும்பும் பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள், பரீட்சை எழுதவிரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவுகளை புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் பிற்பகல் 4 - 6 மணிவரை மேற்கொள்ளவும்.

இடம்: - அன்பொளி கல்வியகம்
நீராவியடி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 077 3068999

(47982) (15-34) இயக்குநர்.

ஓராண்டு நினைவஞ்சலி

மண்ணில் 17 - 05 - 1932

விண்ணில் 27 - 01 - 2005

திருமதி வல்லிபுரம் நல்லம்மா

அன்பால் எம்மை அரவணைத்து
அறிவால் எம்மை உயரவைத்து
நன்நெறியால் வாழ வழிகாட்டிய தெய்வமே!
ஓராண்டு நிறைவினிலே
உங்கள் ஆத்ம சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி. (45988)(26.19.17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கிறிஸ்தவ சேவ ஆசிரமம்

மருதனார்மடம்

நன்றி செலுத்தும் நற்கருணை வழிபாடு

அன்புடையீர்!

அருட்திரு சேவக் சாம் T. அல்பிரட் (சாம் அண்ணன்) நினைவாகவும் அவர் தம் வாழ்வுக்கும், திருப்பணிக்குமாக இறைவனுக்கு நன்றி கூறும் நற்கருணை வழிபாடு நாளை (28.01.2006) சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஆசிரம ஆலயத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(44887)(26.17.19) -பரிபாலனசபை.

மரண அறிவித்தல்



அமரர் வைத்திலிங்கம் கந்தையா கனகரத்தினம்

(முன்னாள் யாழ்.குணரத்தினம் ஸ்ரோஸ், வட்டுக்கோட்டை ஸ்ரீமுருகன் அரிசி ஆலை)

கேணியடி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகரத்தினம் (கனகசபை) 24-01-2006 செவ்வாய்க்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னத்தங்கம் தம்பதியரின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான துரையப்பா - கண்மணி தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் V.K.குணரத்தினம் (பிரபலவர்த்தகர்), V.K. அன்னலிங்கம் (கனடா), கமலாம்பிகை (கனடா), காலஞ்சென்ற அம்பாலிகை, பரமேஸ்வரி (U.K) ஆகியோரின் அன்புச் சகோதரரும் கௌரி (U.K), கௌசலா(U.K), கௌதீஸ்வரன் (கனடா), கௌரீஸ்வரி (கனடா), கௌசினி (சுவிஸ்), கௌசீலன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகேந்திரன் (U.K), நவரத்தினம் (U.K), பிரியதர்சினி (கனடா), அமரர் ஸ்ரீஸ்கந்தராசா, ஜெயக்குமார் (சுவிஸ்), சுவேந்தினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற நவமணி, சற்குணதேவி, மகேஸ்வரி, காலஞ்சென்ற நடராசா, சிற்றம்பலம், மாசிலாமணி (U.K., முன்னாள் குடியேற்ற அதிகாரி), காலஞ்சென்ற பாக்கியம், நாகமணி ஆகியோரின் மைத்துனரும் நிவேதா, மேதினி, சிநேகா, நிதுசன், நிந்துஷா, நிலுக்சன், சிம்யா, அக்ஷயா, றேனுசன், ஜஸ்வினி, ஜஸ்மிதா, தூர்சன், அகிசன், அஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 29-01-2006 ஞாயிற்றுக்கிழமை London Henton மயானத்தில் பிற்பகல் 2 மணிமுதல் 4 மணிவரை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, தகனக்கிரியைகள் இந்து முறைப்படி நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

V.K. குணரத்தினம் (சகோதரர்),
கேணியடி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.
021 4590362
021 2225459 (57061)(26.17.19)

தகவல்:
திருமதி ம.கௌரி (மகள்-U.K.)
T.P.: 0044 2083457327 - 0044 7951277207
Email : GOWRI3@yahoo.Com.

4ஆம் ஆண்டு நினைவுத் திருப்பலி

மண்ணில் 29 - 05 - 1922

விண்ணில் 25 - 01 - 2002

அமரர் ம.மே.இராசமணி

(ஆசிரியை, அல்லாரை அ.த.க. பாடசாலை, கரவெட்டி கிழக்கு அ.த.க. பாடசாலை, கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி)

எமது அம்மாவின் 4ஆவது ஆண்டு நினைவுத் திருப்பலியிலும் மதிய உணவு விருந்திலும் பங்குகொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் : கல்வாரிப் பூங்கா - வவுனிக்குளம்
காலம் : 28.01.2006 சனிக்கிழமை முற்பகல் 11 மணி

(24.26.19.17) அருட்தந்தை ம.சே.கருணாரத்தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்மக்கள் மீதான இராணுவ அடாவடிகளை தடுக்கக் கோரி ஐ.நா.செயலருக்கு மகஜர்

புளியங்குளம்,ஜன.27

தமிழர் தாயகப் பகுதிகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மேற்கொள்ளும் மக்கள் மீதான அடாவடித்தனங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஐ.நா.செயலாளர் நாயகம் கோபிஅனானுக்கு மகஜர் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது.

புளியங்குளத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட அரசுக்கு எதிரான கண்டனப் பேரணியின் முடிவிலேயே இந்த மகஜர் அனுப்பி வைக்கப்பட்டது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை இராணுவத்தினர் வடக்கு - கிழக்கு தமிழர் தாயகப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்களாகிய எம்மீது மேற்கொள்ளும் அரச பயங்கரவாத செயற்பாடுகளை உடன் நிறுத்த ஐ.நா. செயலாளர் நாயகம் ஆகிய தாங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொண்டு பின்வரும் விடயங்களைத் தங்களின் கவனத்திற்குச் சமர்ப்பிக்கின்றோம்.

* தமிழர் தாயகப் பிரதேசத்தில் ஸ்ரீலங்கா இராணுவத்தால் திட்டமிட்ட ரீதியில் நடத்தப்படும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளை உடன் நிறுத்தவேண்டும்.
* இராணுவத்தினர் சோதனை என்ற போர்வையில் மக்களிற்கு ஏற்படுத்தும் கெடுபிடி நடவடிக்கைகளை நிறுத்தவேண்டும்.
* இராணுவத்தால் தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கடத்தப்படுவது, கைதுசெய்யப்படுவது, கொலைசெய்யப்படுவது, பெண்கள் பாலியல் வல்லுறவு செய்யப்படுவது நிறுத்தப்படவேண்டும்.
* யுத்தநிறுத்தத்தினை முழுமையாக அமுல்படுத்த ஆவன செய்யவேண்டும்.
* எமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் இராணுவத்தினர் ஊடுருவி எமது போராளிகள், பொறுப்பாளர்கள் மீது மேற்கொள்ளப்படும் சகல தாக்குதல்களையும் உடன் நிறுத்தவேண்டும். (த-355)

வன்னிக்கு இடம்பெயர்வோர் அங்கு பதிவுகள் மேற்கொள்ளவேண்டும்

பரந்தன்,ஜன.27

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தற்போது நிலவிவரும் அசாதாரண சூழ்நிலை காரணமாக வன்னிப்பகுதிக்கு இடம் பெயர்ந்து வருபவர்கள் தாம் குடியமரும் உதவி அரச அதிபர் பிரிவுகளில் பதிவுகளை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ நிர்வாக சேவையினர் தெரிவித்துள்ளனர்.

இடம்பெயர்ந்து செல்பவர்களுக்கு உலர் உணவுக்குரிய நிவாரண அட்டைகளைப் பெற்றுக்கொடுக்கும் முகமாகவே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

தற்போது பெரும்பாலான மக்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து வன்னிக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். (203-352)



வீதி சேதம்

புளியங்குளம்,ஜன.27

வவுனியா, பாலமோட்டை - மூண்டு முறிப்பு வீதியில் பனிக்கன்குளத்திலிருந்து ஊறல்குளம் வரையான 4 கிலோமீற்றர் வீதி மிகவும் சேதமடைந்துள்ளதால் இந்த வீதியால் பயணம் செய்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

அத்துடன், நவ்வி - புதூர் வீதியும் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால் போக்குவரத்தில் சிரமம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.(203-355)

மருத்துவ முகாம்

பரந்தன்,ஜன.27

தமிழீழ சுகாதார சேவையினரால் கடந்த வாரம் முல்லைத்தீவு, மல்லாவி அரச வைத்தியசாலைகளில் விசேட மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இதில் 60 பேர் பற்சிகிச்சை பெறுவதற்கும் 76 பேர் கண்சிகிச்சை பெறுவதற்கும் வருகை தந்திருந்தனர். நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனத்தினரது அனுசரணையுடன் இந்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. (203-352)

வேரவில் - கிராஞ்சி வீதி மிகவும் மோசம்

முழங்காவில், ஜன.27

வேரவிலுக்கும் கிராஞ்சிக்கும் இடைப்பட்ட 3 கிலோமீற்றர் நீளமான வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் உள்ளது.

பாரஊர்த்திகள், பேருந்துகள் எவையும் இந்த வீதியால் செல்லமுடியாத நிலை காணப்படுகிறது என்றும் -

இவ்வீதியால் பயணம் செய்கின்ற மக்கள் மிகுந்த சிரமப்படுகின்றனர் என்றும் மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (த-323)

பொது இடத்தில் முன்பள்ளி இயங்குகிறது; இதனால் சிறுவர்களின் கல்வி நிலை பாதிப்பு!

புளியங்குளம், ஜன.27

வவுனியா வடக்கு, மதியாமடு முன்பள்ளி நீண்டகாலமாகப் பொதுநோக்கு மண்டபம் ஒன்றில் இயங்கி வருகின்றமையால் சிறுவர்களின் கல்வி நிலை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த மண்டபத்திலேயே கிராம சேவகரது காரியாலயமும் இயங்குகின்றது.

அத்துடன், பல்வேறு ஒன்றுகூடல் நிகழ்வுகளும் அடிக்கடி இந்த மண்டபத்தில் நடைபெற்றுவருகிறன்றன.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சிறார்களின் கல்விச் செயற்பாடுகள் தடைப்படுகின்றன.

இதனால், அப்பகுதி மக்கள் சிறுவர்களின் எதிர்காலம் பற்றி பெரும் கவலையடைந்துள்ளனர்.

எனவே, உரியவர்கள் இவ்விடத்தில் அக்கறை கொண்டு இப்பகுதிச் சிறுவர்களுக்கென முன்பள்ளி ஒன்றை அமைத்துத் தருமாறு மக்கள் கேட்டுள்ளனர். (203-355)

கேணல் கிட்டுவின் 13ஆவது நினைவு நாளான கடந்த 16ஆம் திகதி புலிகளின் குரல் அமலன் அரங்கில் இடம்பெற்ற சிறப்பு முத்தமிழ் கலையரங்க நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன், புலிகளின் குரல் நிறுவனப் பொறுப்பாளர் நா.தமிழன்பன் ஆகியோர் நிகழ்வில் கலந்துகொண்டிருப்பதை முதலாவது படத்திலும் -

2005ஆம் ஆண்டில் சிறந்த வானொலி மன்றமாகத் தெரிவுசெய்யப்பட்ட மல்லாவி வானொலி மன்றத்துக்கான சுற்றுக் கேடயத்தை அரசியல்துறைத் துணைப்பொறுப்பாளர் தங்கன் வழங்குவதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: பரந்தன் செய்தியாளர்)

புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படவில்லை

இதனால் நோயாளர் பெரும் சிரமம்

புளியங்குளம்,ஜன.27

வவுனியா வடக்கு, புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையில் நிரந்தரமாக வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படாமையால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த வைத்தியசாலை கடந்த வருடமே மீள இயங்க ஆரம்பித்தது. இது ஆரம்பித்த திலிருந்து டாக்டர் எஸ் நடராஜா கடமை புரிந்து வந்தார்.

அவர் இவ்வருடம் பணியில் இருந்து விலகியுள்ளமையால் அவரது இடத்திற்கு இதுரை எவரும் நியமிக்கப்படவில்லை.

இதன் காரணமாக இப்பகுதி மக்கள் சிகிச்சை பெறுவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இப்பகுதி மக்கள் சிகிச்சை பெறவேண்டுமானால் வவுனியா வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சையைப் பெறவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. வவுனியா வைத்தியசாலை புளியங்குளம் பிரதேச வைத்தியசாலையிலிருந்து 24 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

எனவே, உரியவர்கள் இந்த விடயத்தில் கவனமெடுத்து மக்களின் அசௌகரியங்களைப்போக்க முன்வரவேண்டுமென்று இப்பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

அத்துடன் இந்த வைத்தியசாலையில் தற்போது 4 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர் எனவும் இன்னும் 8 பேருக்கான வெற்றிடங்கள் நிலவுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-355)

விடத்தல் தீவு உவர்நீர் அணை உடைப்பு; குடிமனைக்குள் கடல்நீர் புகும் அபாயம்!

மன்னார்,ஜன.27

விடத்தல் தீவுக்கிராமத்தின் உவர்நீர் அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளது. இதனால், கிராமத்தினுள் உவர்நீர் வரும் அபாயநிலை தோன்றியுள்ளது.

இந்த அணைக்கட்டு கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 8 லட்சத்து 75 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டதாகவும் இது மண் அணை என்பதாலேயே இலகுவில் உடைப்பு எடுத்துள்ளதாகவும் இதனால் கிராம வீதிகள், காணிகள் என்பனவும் சேதமடைந்துள்ளன என்றும் கூறப்பட்டது.

எனவே, உரிய தரப்புகள் இவ்விடயத்தில் அக்கறைகொண்டு செயற்படவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-403)

இலுப்பைக்கடவைப் பகுதியின் சிறு வீதிகள் பெரும் சேதம்!

மன்னார், இலுப்பைக்கடவைக் கிராமத்தின் சிறுவீதிகள் சேதமடைந்த நிலையில் குண்டும்குழியுமாகக் காணப்படுகின்றன. இதனால், இக்கிராம மக்களும் அரச ஊழியர்களும் பாடசாலை மாணவர்களும் நாளாந்தம் பெரும் சிரமத்துடன் போக்குவரத்துச் செய்யவேண்டிய நிலை தோன்றியுள்ளதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

இந்த வீதிகள் கடந்த 5 மாத காலத்திற்கு முன்னர் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் சுமார் 16 லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவில் கிரவல் மண்போட்டு புனரமைக்கப்பட்டன.

கிரவல் கொண்டு புனரமைக்கப்பட்ட மையே இவ்வீதிகள் குறுகிய காலத்தில் சேதமடையக் காரணம் என்று இக்கிராம மக்கள் தெரிவிக்கின்றனர். (த-403)

மாமனிதர் சதானந்தசிவத்துக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வு அண்மையில் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. போராளி தமிழ்க்கவி பொதுச்சுடர் ஏற்றுவதை முதல் படத்திலும் விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன், தமிழீழ தேசியத் தொலைக்காட்சியின் பிரதம ஆசிரியர் கருணாகரன் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (த-352)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரங்கள்

விற்பனைக்கு

மருத்துவ மாணவியின் தனிப் பாவனையில் இருந்த 900km மட்டும் பாவித்த Scooty Pep-DAIDO உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 393/14, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. (45992)

நல்ல நிலையில் உள்ள Lx 30 ஹைஏர்ஸ் வாகனம் விற்பனைக்குண்டு. தொடர்புகள்: கெ.விக்ரர், 40, இராஜேந்திரா வீதி, குருநகர், யாழ்ப்பாணம். T.P. 077 - 6510167, 2284. (45997)

6kw, 5kw, 1.5kw டீசல் ஜெனரேற்றர், றொபின் 15 நீரிறைக்கும் இயந்திரமும் விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி, சிவன் வீதி, பரவைக்குளம், திருநெல்வேலி.(45991)

கொள்வனவும் விற்பனையும்

புறொயிலர், கல்பேட்ஸ் கொள்வனவு செய்யப்படும், கோழி எரு விற்பனை செய்யப்படும். தொடர்பு: வீனஸ் பாம், திருநெல்வேலி சந்தி, நல்லூர் பிரதேச செயலகம் முன்பாக. T.P. 0712513721. (57051)

தவறிவிட்டது

பலாலி கிழக்கு, பலாலியைச் சேர்ந்த தம்பிஐயா சிவர்சனா என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 0907029127) இராசவீதி, தோப்பிற்கும் அச்சுவேலி பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யா/புனித திரேசா மகளிர் கல்லூரி, அச்சுவேலியில் ஒப்படைத்து உதவவும். (57063)

மயில்வாகனம் சுஜாத்தா என்பவருடைய தேசிய அடையாள அட்டை (797843890V) யாழ்.நகருக்குள் 21.01.2006 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பெரிய தம்பிரான் கோயில் வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (45997)

துன்னாலையைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை சரஸ்வதி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (565842579V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கிருஸ்ணபிள்ளை சரஸ்வதி, கிராமக்கோட்டுச் சந்தி, புலோலி கிழக்கு, பருத்தித்துறை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும். (45842)

Samsung E-700 Model போன் பாஷையூருக்கும் குருநகருக்குமிடையில் 25.01.06 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 61/3, மவுன்கார்மேல் வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும் or 0776062596 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (57065)

MD 90 சிவப்பு நிறம் NPGH 5944 என்னும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் கன்னாதிட்டி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல.47, கன்னாதிட்டி வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் T.P. 0212227963. (57068)

நாய்கள் விற்பனைக்கு

கொக்கர் ஸ்பேனியல் (ஆண்) அல்ஷேசன், (பெண்) டொமமன் பின்சர் (ஆண்) நாய்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: R.ஜெயராஜ சிங்கம் (பவான்), உடுவில் மேற்கு, சுன்னாகம். (45934)

காணி விற்பனைக்கு

கிளிநொச்சி நகரிலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் திருவையாறு, முதலாம் பகுதியில் நல்ல குடியிருப்புச் சூழலில் (½) ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: தேவன், 32/1, திருவையாறு. தொலைபேசி இல. 0773164615. (சி-47518)

இசையும் நாடக நூல்

எங்களது சமகால வாழ்க்கையைச் சித்திரிக்கின்ற, பெரும்பாலும் சிறுவர்களையே பாத்திரங்களாகக் கொண்ட, கல்வியோடு சம்பந்தப்பட்ட விடயங்களை அலசுகின்ற ஒரேஒரு தமிழ் நாடக நூல். கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியது. (57070)

மணமகன் தேவை

யாழ்.உயர் கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 1972 இல் பிறந்த, 7இல் செவ்வாய் உள்ள, அரச உத்தியோகத்தில் இருக்கும் மணமகளுக்கு மணமகன் தேவை தொடர்பு: T.P. 0773288792, 077 3288793 (57051)

மணமகள் தேவை

யாழ். இந்து, 1976, ரேவதி, B.Sc. Eng/M.Sc. Computer Science தராதரம் உடைய கொழும்பில் System Eng. தொழில் பார்க்கும் மணமகனுக்கு M.B.B.S/Eng./B.Sc.தொழில் பார்க்கும் மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2793, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (57064)

வீடு வாடகைக்கு

கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியில் தனி வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

கு.மோகன்

021 222 5021

(211119) **0773 554 440** (45998)

ஆலோசனைக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ் மாவட்டத்தில் புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவது தொடர்பாக ஆலோசனைக் கூட்டங்கள் எதிர்வரும் 2ஆம் திகதி நடைபெறவுள்ளன.

அன்று முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்திலும் இக்கூட்டங்கள் நடைபெறவுள்ளன.

இதில் பொதுமக்கள் பிரதிநிதிகள், சமூக மட்ட நிறுவன அங்கத்தவர்கள், கல்விமான்கள் உட்பட அனைவரையும் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குமாறு யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்துள்ளார். (203-204)

கலந்துரையாடல்

தென்மராட்சி,ஜன.27

தென்மராட்சி கல்வி வலயப்பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான பீ.வீ.எவ். (P.V.F) ஆங்கில கற்கைநெறி தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் காலை 9 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெற உள்ளது என்று கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (203-117)

Direct Start

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு விசேட பிரிவுகள்

ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

கல்வி ஆண்டு 2006

Diploma in MS Office XP — 3-4 months

Diploma in Web Design — 3-4 months

Diploma in Desktop Publishing — 3-4 months

Diploma in Computer Programming — 3-4 months

Diploma in Computerised Accounting — 3-4 months

Diploma in Computer Studies — 3-4 months

ASIAN COMPUTER SYSTEMS

யாழ்ப்பாணம்: 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். Tel:021-222 5677

சுன்னாகம்: 108, K. K. S. வீதி, (Jet Motors) சுன்னாகம். Tel:071-2501589

நெல்லியடி: கொடிகாமம் ரோட், நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்திற்கு முன்பாக) Tel : 077 - 3122198

சாவகச்சேரி: கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3039587

ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்

செல்வி

இராமலிங்கம் புரமேஸ்வரி

[கல்வயல், சாவகச்சேரி]

தோற்றம் 07.12.1959

மறைவு 21.01.2001

திதி ; 27.01.2006 திரயோதசி

பார்தன்னில் உதித்திட்ட
பசும் பொன் ஒன்று
சீர் பூத்த கல்வயல் பதி தன்னில்
சீர் மேவும் பரமேஸ்வரியாகி
ஊர் போற்ற வாழ்ந்திங்கு
உற வேற்றும் பாராமன்
தார் சூடும் மலர்ப்பாதம்
தனைச் சேர்ந்து இன்று
ஐந்தாண்டு நிறைந்தனவே!

ஆண்டுகள் எத்தனை சென்றாலும் என்றும் தங்களை நினைவு கூருவதுடன் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:
அண்ணன் மகன்
வேதாரணியம் பிரபாகரன்
குடும்பம்.

(45810)

மரண அறிவித்தல்

திருமதி சின்னராசா சரஸ்வதி

நாச்சிமார் கோயிலடி, தலையாழியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னராசா சரஸ்வதி 25.01.2006 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா -பொன்னம்மா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை- மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சின்னராசா அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற கனகசபாபதி, மகேஸ்வரி, மாசிலாமணி (U.K.), புவனேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற கணேஸ், காலஞ்சென்ற நாகரத்தினம், பராசக்தி, காலஞ்சென்ற சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் மகேசன், காலஞ்சென்ற கமலநாதன், கமலாதேவி (இந்தியா), விஜயலட்சுமி, சத்தியமூர்த்தி (U.K.), சண்முகானந்தன் சத்தியசீலன், காலஞ்சென்ற குமரதாஸ், சத்தியலட்சுமி ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெகதீஸ்வரி, காந்தகுமார், சிவபாதசுந்தரம், அன்னபூரணி, கலையரசி, சசிகலா, மோகன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெகன், குகன், ஜெயந்தன், ஜெனுசா, சிந்துஜன், Dr. பிரகலாதன் பிருந்தாபன், மீராஜினி, திவாகினி, சுபாஜினி, பிரசாந், சாருஜா, காலஞ்சென்ற கம்சிகா, அபிநயா, நிருசிகா, மிதுஷா, பிருந்திகா, அர்பிந்தா, ஆரபிகா, ஆர்த்திகன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2006) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 3 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(ராஜா கிரீம் கவுஸ்-யாழ்.)

87/8, இராமநாதன் வீதி, தலையாழி,யாழ்ப்பாணம். (57067) (5411.19)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

குடியரசு தின ஏற்பாடுகளுக்கு மத்தியில் இந்தியாவில் நேற்றுக் குண்டு வெடிப்பு

புதுடில்லி,ஜன.27

இந்தியா தனது குடியரசு தினத்தை நேற்று சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஆயத்த வேலைகளில் ஈடுபட்டிருந்தவேளை, மாவோ தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கும் ஆயுததாரிகள் இந்தியாவின் வடக்குப் புற நகர் ஒன்றில் இரண்டு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். பீஹார் மாநிலத்தின் தலைநகர் பட்னாவில் இருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள காயா எனும் பிரதேசத்தில் உள்ள ரயில்வேப் பாலம் ஒன்றையே தீவிரவாதிகள் தாக்கியுள்ளனர்.

மற்றைய தாக்குதல் சம்பவம் ஜார்க்கண்ட் மாநிலத்தில் உள்ள பாலமு எனும் இடத்தில் உள்ள பொலீஸ் நிலையம் ஒன்றை இலக்குவைத்தே நடத்தப்பட்டுள்ளது.

குடியரசுத்தினத்தை முன்னிட்டு இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் கடந்த சில வாரங்களாக முடுக்கி விடப்பட்டிருந்தபோதும் தீவிரவாதிகள் இந்தப் பாதுகாப்பையும் மீறித் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். நேற்று அதிகாலையில் குண்டுகள் வெடித்துள்ளன. ஆனால், உயிரிழப்புகள் ஏதும் இடம்பெற்றதாகத் தகவல்களில்லை.

ரயில் பாலத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து அந்தப் பிராந்தியத்திற்கான ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன என அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிழக்கு இந்தியப் பகுதிகளுக்கும் தலைநகர் புதுடில்லிக்குமான முக்கிய ரயில் போக்குவரத்து மார்க்கங்களில் ஒன்றாக, தாக்கப்பட்ட இந்த ரயில் பாலம் விளங்குகின்றது.

57ஆவது குடியரசுத் தினமான நேற்று இந்தியா முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 10 ஆயிரம் பொலீஸாரும் துணைப்படையினரும் முக்கிய நிலைகளில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. தலைநகர் புதுடில்லியில் பிரதான குடியரசுத் தின அணிவகுப்பு நடைபெறும் இடத்திற்குப் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. இதற்கு முன்னர் நடந்த குடியரசுத் தின வைபவங்களின் போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் குழப்பகரமான சம்பவங்கள் தீவிரவாதிகளால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இம்முறை குடியரசுத் தின விழாவில் சிறப்பு விருந்தினராக சவுதி அரேபிய மன்னர் அப்துல்லா கலந்துகொண்டார். (ற-ரி)

ஆப்கானில் சிறை உடைப்பு

ஆப்கான்,ஜன.27

ஆப்கானிஸ்தானின் காபூல் நகரில் உள்ள சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தலிபான் கைதிகள் 7 பேர் நேற்றுமுன்தினம் சிறையை உடைத்து தப்பிச்சென்றனர்.

இதனையடுத்து பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலீஸார் 10 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தப்பிச்சென்ற சிறைக்கைதிகள் அனைவரும் அல்ஹெய்டா அமைப்பின் உறுப்பினர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். அவர்களைதேடிப்பிடிக்கும் நடவடிக்கையில் ஆப்கான் பொலீஸாரும் அமெரிக்கப் படையினரும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (ம)

ஈரான் தீவிரவாதிகளுக்கு பிரி.உதவி

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஈரானின் தென்மேற்கு நகரான அஹ்வாசில் 8 பேர் பலியாகக் காரணமான குண்டுத் தாக்குதலை நடத்தியவர்களுக்குப் பின்புல ஒத்துழைப்பை பிரிட்டன் வழங்கியதாக ஈரானிய அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுதொடர்பாக கருத்து வெளியிட்ட ஈரானிய வெளிவிவகார அமைச்சர் மொனொச்சர் மொட்டக்கி "பிரிட்டன் மீது எழுந்துள்ள சந்தேகங்களுக்கு அவர்கள் பதிலளிக்க வேண்டும்" - என்று கூறினார்.

இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்திய தன் மூலம் பிரிட்டிஷ் அதிகாரிகளின் மனங்களில் உள்ள எண்ணங்கள் படம் பிடிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். எனினும் பிரிட்டன் மீது தெரிவிக்கப்பட்டுள்ள இந்தப் பயங்கரவாதக் குற்றச்சாட்டைப் பிரிட்டன் வெளிவிவகார அலுவலகப் பேச்சாளர் ஒருவர் மறுத்துள்ளார்.

பிரிட்டிஷ் அரசிற்கும் இந்தத் தாக்குதல் சம்பவத்திற்கும் எந்த ஒரு தொடர்பும் இல்லை என்றும் அடிப்படைத் தகவல்கள் எதுவும் இன்றி தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டு இது என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவத்திற்கு அரேபியத் தீவிரவாத அமைப்பு ஒன்று தனது இணையத் தளத்தில் உரிமைகோரியுள்ளது. எமது இராணுவ அமைப்பைச் சேர்ந்த போராளிகள், எதிரிகளின் கோட்டைக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியுள்ளார்கள் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கருத்துத் தெரிவித்த ஈரான் பிரதமர் "இந்தத் தாக்குதலின் பின்புலத்தில் பிரிட்டன் செயற்பட்டது. எமது அதிகாரிகளுக்கும் புலனாய்வு அமைப்புகளுக்கும் மிகத் தெளிவாகத் தெரியும்" - என்று கூறினார்.

இதுதொடர்பாக எழுந்துள்ள குற்றச்சாட்டுகளுக்குப் பிரிட்டன் உரிய கவனம் செலுத்தும் என்று தான் எதிர்பார்க்கிறார் என்றும் அவர் கூறினார். (ம)

சீனாவில் பெண் ஒருவர் பறவைக் காய்ச்சலால் பலி

பீஜிங்,ஜன.27

தெற்காசியப் பிராந்தியத்தில் மீண்டும் தலைதூக்கியுள்ள பறவைக் காய்ச்சல் நோயால் பீடிக்கப்பட்ட சீனப் பெண்மணி ஒருவர் பலியாகியுள்ளார்.

சீனாவின் தென்மேற்குப் பகுதியில் உள்ள ஹீங்கு எனும் மருத்துவமனையில் ஆபத்தான கட்டத்தில் அனுமதிக்கப்பட்டிருந்த 29 வயதான சுனேம்ட்கோ எனும் பெண்ணே இவ்வாறு மரணமாகியுள்ளார். இவருடன் சேர்ந்து சீனாவில் இந்நோயினால் பலியாகியோர் எண்ணிக்கை 7 ஆக உயர்ந்துள்ளது.

இவரது உடலில் பறவைக் காய்ச்சல் நோய்க்கிருமியான 'எச்5என்1' கிருமி இருப்பது கடந்த 17ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டதாக உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது. பண்ணைப் பொருள்கள் விற்கும் வர்த்தக நிலையம் ஒன்றில் இவர் கடமையாற்றினார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், இந்த நிலையத்தில் உலர் உணவுப் பொருள்களான விதைகள் மற்றும் தானிய வகைகளே விற்கப்படுவதாகவும் கோழி இறைச்சியோ அன்றி பண்ணைப்பறவைகள் சம்பந்தப்பட்ட உணவுப் பொருள்களோ விற்கப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சீனர்களது புதுவருடமான லூனார் புதுவருடத்தை முன்னிட்டு அந்தப் பண்டிகைக் காலங்களில் பெருந்தொகையான கோழிக் குஞ்சுகள் உணவுக்கு உபயோகிக்கப்படுவது வழமை. எனவே, இம்முறை இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்குமாறு சீன பிரதி அமைச்சர் ஒருவர் தமது அதிகாரிகளுக்கு அறிவுறுத்தி இருந்தார்.

பண்ணைப் பறவைகளின் சமைத்த உணவை உண்பதால்,பறவைக் காய்ச்சல் நோய் பரவுவதில்லை. எனினும், பண்ணைப் பறவைகளுடன் நேரடியாக நெருங்கிய தொடர்புகள் வைத்திருந்தால் அது பரவக்கூடிய சாத்தியம் உள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதுவரை தெற்காசியப் பிராந்தியத்தில் 70இற்கும் அதிகமானோர் இந்நோயால் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதே சுகிர்தராஜனுக்கு செய்யும் கைம்மாறாகும்

அவரது படுகொலையைக் கண்டித்து ஈழவேந்தன் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.27

எமது விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதே 'சுடர்ஒளி' திருமலை செய்தியாளர் சுகிர்தராஜனுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன்.

'சுடர்ஒளி' பத்திரிகையின் திருமலைப் பிரதேச செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மா.க.ஈழவேந்தன் எம்.பி. இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

'சுடர்ஒளி' திருமலைச் செய்தியாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜனின் உயிர் பறிக்கப்பட்ட கொடிய செய்தி எம்மைக் கதிகலங்கச் செய்துள்ளது. வெறிகொண்ட சிங்கள அரசின் கணிப்பின்படி தமிழனாய்ப் பிறப்பது முதற் குற்றம். தமிழனுக்காகக் குரல் எழுப்புவது அதைவிட மன்னிக்க முடியாத குற்றமாகும். இந்த அடிப்படையிலேயே திட்டமிட்டு ஊடகவியலாளர் உயிருக்கு உலை வைக்கும் முயற்சியில் சிங்கள அரசும் இந்த அரசிற்கு பக்கதுணையாக ஆளும் கட்சிக்கு அடிவருடிகளாக விளங்குகின்ற ஆயுதக் குழுக்களும் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்களைத் தாக்கியும் உயிரைப் பறிக்கும் முயற்சியிலும் ஈடுபட்டுள்ளன.

தமிழ் ஊடக அலுவலகங்கள் தாக்கப்படுவது, அங்கு பணிபுரிவோருக்கு எரிச்சலூட்டித் தொல்லை கொடுப்பது இவை அனைத்திற்கும் மேலாக ஓர் உயிரைப் பறிக்கின்ற அளவிற்கு ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது.

தமிழ் ஊடகங்களாகிய வீரகேசரி, தினக்குரல், சுடர்ஒளி, உதயன், நமதுஈழநாடு, வலம்புரி ஆகிய அனைத்து தமிழ் ஊடகங்களையும் வாட்டி வதைக்கின்ற சிங்கள வெறியாட்டம் சுடர்ஒளிச் செய்தி இதழில் கூடிய கவனம் செலுத்தி பல்வேறுபட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளது. முதலில் சுடர்ஒளியின் வெள்ளவத்தையில் இயங்குகின்ற விளம்பர அலுவலகம் ஒகஸ்ட் மாதம் கிரனெட் தாக்குதலுக்கு இலக்கானது பின்பு அதே மாதம் 29 ஆம் திகதி கொழும்பில் இயங்கும் 'சுடர் ஒளி'யின் தலைமை அலுவலகத்திற்குச் சென்று பாதுகாவலரையும் குண்டுவீசிச் சாகடித்தது.

இந்த வெறியாட்டத்தின் தொடர்ச்சிதான் எரிமலையாக மாறிவரும் திருமலையில் பணியாற்றிய 'சுடர்ஒளி'ச் செய்தியாளர் சுகிர்தராஜன் தனது வீட்டு வாசலிலேயே இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார். தனது இளம் மனைவியும் தன் பச்சிளக் குழந்தைகள் இருவரும் கதறி அழும் நிலையில் அவர்களைத் தவிக்க விட்டு அவர் உயிர் பறிக்கப்பட்டுள்ளது. சுகிர்தராஜன் அவர்களை எமக்கு நன்கு தெரியும். காட்சிக்கு எளியராய் அனைவரோடும் இனிமையாகப் பழகும் இயல்பு படைத்தவர். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினாலும் புத்தர் சிலை நிறுவப்பட்டதினாலும் திருமலைக்கு வருகின்ற ஆபத்துகளை அவர் புட்டுக்காட்டி வெளியிட்ட செய்திகளால் ஆத்திரமடைந்த சிங்கள வெறிக்கும்பலும் அதற்குத் துணை போன ஆயுதக் குழுக்களும் மன்னிக்க முடியாத இக்கொடிய செயலில் ஈடுபட்டிருக்கின்றது என்பதை எவரும் மூடிமறைக்க முடியாது.

நாட்டின் குடியரசுத் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஏதோ இரங்கி, இறங்கி வந்து எம் தலைவர் பிரபாகரனுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனச்சிக்கலுக்குத் தீர்வுகாணப் போவதாக உச்சகட்ட நடிப்பினை நடத்துகிறார். ஈழத்தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இன்றைய நெருக்கடியான சூழலில் நோர்வேதான் எமக்கு ஓரளவு துணை நிற்கமுடியும்.

மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் இங்கு வருகை தந்த ஐ.ஆர்.ஏ. அமைப்பின் முக்கிய பேச்சாளர் மார்டின் மக்ஜீனிஸ் அவர்களை சந்தித்து உரையாடிய போது தமிழர் ஒரு தேசிய இனம், தமிழரின் தாயகக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். தமிழருக்குத் தன்னுரிமை (சுயநிர்ணயம்) நிலைநாட்டும் உரிமையும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்ற கோட்பாடுகளை ஏற்கமறுக்கின்ற அரசுடன் நாம் பேசுவதில் எதுவித பயனும் இல்லை என்று குறிப்பிட்டோம்.

சுருங்கக் கூறின் மேற்குறித்த தமிழினத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை சிங்கள அரசு ஏற்க மறுக்கின்ற நிலையில் திருமலை சுடர் ஒளி செய்தியாளர் சுகிர்தராஜன் உட்பட பல தமிழ் உயிர்களை, இளம் உயிர்களை ஊடகத்துறையில் எமக்காக குரல் எழுப்புகின்ற உயிர்களை இழக்க வேண்டி ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும். ஆகவே, 'கெஞ்சிப் பெறுவது சலுகைகள், கேட்டுப் பெறுவது உரிமைகள். ஆனால், விடுதலையையோ நமக்கு நாமே நிலைநாட்டிக் கொள்கிறோம்' என்ற உயர்ந்த தத்துவத்தின் அடிப்படையில் எம் விடுதலைப் போராட்டத்தைத் தொடர்வதுதான் திருமலை சுடர்ஒளி செய்தியாளர் சுகிர்தராஜனுக்கு நாம் செய்யும் கைம்மாறாகும். இழக்கக் கூடாத துடிப்புள்ள ஒரு தமிழ் உயிரை இழந்துவிட்டோம். நாம் பெறுகின்ற விடுதலைதான் சுகிர்தராஜன் உயிர் அமைதி காணத் துணைநிற்கும்.

செஞ்சிலுவைசங்க முத்த உறுப்பினர் கௌரவிப்பு

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் முதிய உறுப்பினர்களைக் கௌரவிக்கவுள்ளது.

முதல் கட்டமாக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வலிகாமம் வடக்குப் பிரிவின் தலைவர் எஸ்.சிவமகாராஜா கௌரவிக்கப்பட உள்ளார் என்றும் -

தொடர்ந்து இந்தக் கௌரவிப்பு நிகழ்வுகள் இடம்பெறும் எனவும்தெரிவிக்கப்பட்டது. (ஓ-111)

பற்றுவிட்டு பதம் பற்றுக

ஆன்மாவைப் பற்றும் பாசமுந்தான் பிணைத்து வைத்துப் படாதபாடு படுத்துகின்றன. இவையில்லாது போய்விட்டால் ஆன்மா ஈடேற்றங்கண்டுவிடும்.

பற்றறுப்பது சுலபமான காரியமல்ல. "உலகப் பொருள்களில் பற்றுவைத்து என்ன பயன்? ஒருநாள் இறக்கப்போகின்றோம். அதன் பின் நாம் பற்றுவைத்துள்ளவை அனைத்துமே எம்முடையவையாக இல்லாது போய்விடும். எனவே இவற்றில் பற்று வைக்காதீர்கள்" என்று பேசலாம். பற்றை விடுவது பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். ஆனால், பற்றை அறுத்தெறிய எம்மால் முடியாது.

பற்றுக பற்றற்றான் பற்றினை
அப்பற்றை பற்றுக பற்று விடற்கு.

என்று வள்ளுவப் பெருந்தகை கூறுகிறார். ஏனைய பற்றுகளை விடுவதற்கு இறைவன் மேல் பற்றுவைக்கவேண்டுமென்கிறார்.

எமக்குத் தொல்லைதரும் பற்றுகள் இறைவனிடம் பற்றுவைக்க எம்மை விடுவதில்லை. பக்குவப் பட்ட ஆன்மாக் களினாலேயே இந்தச் சாதனையைச் சாதிக்க முடிகிறது.

"வேறு பற்றுகளில்லாமல் உனது பாதங்களிலேயே மனதைப் பதிய வைத்தேன், இனிப் பிறவாத தன்மையை அடைந்து விட்டேன், இறைவா உன்னை நான் மறந்தாலும் எனது நா "நமசிவாய" என்று கூறும். என்னும் நிலையிலிருந்து

மற்றுப் பற்றெனக் கின்றி நின் திருப்
பாதமே மனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கரை
[illegible]கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினும்
சொல்லும் நாநமச்சி வாயவே.

என்று பாடுகின்றார் சுந்தரமூர்த்தி நாயனார். அவரது மன்பக்குவம் கைவரப் பெற்றவர் எல்லாப் பற்றுக்களையும் துறந்து, இறைவனது பாதார விந்தங் களிலேயே மனமொன்றிக் கிடக்கமுடியும். அவருடைய மனம் இறைவனது பாதங் களையே பற்றி நிற்கும்போது அவனை மறக்கமுடியுமா? முடியாதே. அப்படி மறக்க நேரிட்டாலும் இடையறாது *'நமச்சிவாய'* என்று கூறிக் கொண்டிருக்கும் நா தொடர்ந்து அந்த ஐந்தெழுத்து மந்திரத்தைச் சொல்லிக் கொண்டிருக்கும்.



இவ்வாறு இறைவனுடன் ஒன்றிக்கும் பேறு பெற்றவர் மீண்டும் பிறக்கவே வேண்டியதில்லை. அவர் இறைவனது பதங்களுடன் ஒன்றிவிடும் மாபெரும் பேறைப் பெற்றுவிடுவர். இதனாலேயே சிவபுராணம்,

'பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய் கழல்கள் வெல்க' என்றும்

'மாயப்பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி' என்றும் இறைவனது சேவடிகளைப் போற்றுகின்றது.

இறைவனது திருப்பாதங்களில் மனம் பதித்து வழிபட்ட தம்பிரான் தோழரும் *"இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்"* என்று பாடுகின்றார் இறைவனின் அடியிணைகளில் ஒன்றிவிடுவோர் மீண்டும் பிறவாத தன்மையைப் பெறுவர் என்பது உறுதி.

(நன்றி: அரை நிமிட நேரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்பு

எமது தாயக மண்ணில் பிரத்தியேகப்படுத்தப்பட்ட
தூறு வீத செய்முறைப் பயிற்சியுடன் கூடிய கணனிக் கற்கை
நெறிகளைப் புகுத்தும் உயரிய நோக்கில் எமது நிறுவனம் புதிய

விடிவெள்ளியாக

வைபவ ரீதியாக திறந்து வைக்கவுள்ளது
என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்வதுடன்
எமது உறவினர்கள், அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள், மாணவர்கள் அனைவரையும் கலந்துகொண்டு
வாழ்த்துக்களை வழங்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

காலம்: 27.01.2006 (வெள்ளிக்கிழமை)
இடம்: 16/1, கில்னர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரி அருகில்,
பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில் எதிர் ஒழுங்கை.
OR வேளாங்கன்னி மாதா கோயில் எதிர் ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி.)

நிர்வாகத்தினர் மற்றும்
ஊழியர்கள்
UNIT

(கி/47528)

வாழ்த்துகின்றோம்

யா/யாழ் இந்து மகளிர் கல்லூரியின்
புதிய அதிபராக பதவியேற்றுள்ள
திருமதி
வேதநாயகி பேரின்பநாதன்
அவர்களை இன்முகத்துடன் வரவேற்கின்றோம்

யா/யாழ்.இந்து மகளிர் கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

(57066)(32-17-11)

திறைப்பு இல.
1679

25.01.2006 ஆம் திகதி புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி எண்கள் சுப்பர் எண்

25 31 41 47 (16)

செல்லுபடியாகும் டிக்கெட் தொடர் இல. 200912833 இலிருந்து 200929350
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா **1,12,68,700/-** வெல்லப்படவில்லை

வெற்றி எண்கள்	வெற்றி பெற்றோர்	பரிசுத் தொகை	மொத்தம்
4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	-	1,12,68,700/-	-
4 வெற்றி எண்கள் மட்டும்	02	10,00,000/-	20,00,000/-
3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	26	5,000/-	1,30,000/-
3 வெற்றி எண்கள் மட்டும்	444	1,000/-	4,44,000/-
2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல.	1,411	500/-	7,05,500/-
2 வெற்றி எண்கள் மட்டும்	21,526	40/-	8,61,040/-
1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல.	20,477	20/-	4,09,540/-
1 வெற்றி எண் மட்டும்	3,05,120	10/-	30,51,200/-
மொத்தம்			76,01,280/-
தங்க நகைகள் , தையல் இயந்திரம் , மைக்கல்	5	1,00,000/-	5,00,000/-
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை	3,49,011		81,01,280/-

தொடர் இல. 300864102 க்கு மேறபட்ட பச்சை நிற டிக்கெட்டுக்கள் 2006 ஜனவரி 28 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கெட் நீங்கலாக 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

இந்த சனிக்கிழமை
சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா. 1,20,84,400/-

பணமாக வெற்றி பெறாத முக்கெட்டுக்களில் எண் 1 மட்டும்/- பெறுமதியான தங்க நகைகள், ஏதைய இயந்திரம் மற்றும் மனிசக்கல் அங்கியை பரிசு முதலை வென்றெடுத்த 5 டிக்கெட்டுக்களின் தொடர் இலக்கங்கள்.

கொழும்பு	200920697-3-64
மட்டக்களப்பு	200914207-3-54
கம்பஹா	200920736-0-82
கொழும்பு	200928752-9-12
தொலைனறுவை	200920046-9-40

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சேர் மாக்கிலை வீதி
கொழும்பு-08

கண்ணீர் அஞ்சலி

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதியாக கடமையாற்றும்
செல்வி நவரட்ணம் மகேஸ்வரி
அவர்களின் தந்தை
V.நவரட்ணம் அவர்கள்
நேற்று 26.01.2006 காலமானதையிட்டு துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்ப
தோடு, அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.வைத்தியசாலை
தாதியர் நலன்புரிச்சங்கம்.

(57074)(32-17-11)

நீங்க கொம்பியூட்டர்
எக்கவுண்டன்ட்
ஆகவுமா

வீபரங்களுக்கு

(UNIT OF ASIAN BUSINESS COLLEGE)
101,2வது மாடி,ஸ்ரான்லி வீதி,யாழ்ப்பாணம்
Tel : 021-222 8196

5ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்	மறைவு
07	21
-	-
12	01
-	-
1939	2001

செல்வி **பரமேஸ்வரி இராமலிங்கம்**

திதி: அபரபக்க திரயோதசி
கொட்டிய அன்பு எங்கே?
குளிர் நிகு வார்த்தை எங்கே?
மட்டிலா மகிழ்வுகாட்டி
மகிழ்ந்திட்ட நாள்கள் எங்கே?
பட்டிடும் வேதனைகள் எழுதிட வார்த்தை இல்லை
என்றும் உங்கள் நினைவுகளுடன்...

கல்வயல்,
சாவகச்சேரி.

(57072)(26.32.11.17)

தீபன்.

பரிசளிப்பு விழா

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி நடத்தப்பெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்புவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வரணி பொது நூலகத்தில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபைச் செயலாளர் கு.ந. பாலச்சந்திரனும் சிறப்பு விருந்தினராக வரணி மகா வித்தியாலய அதிபர் செ. சுப்பிரமணியமும் கலந்து கொள்வர். விசேட விருந்தினர்களாக இடைக்குறிச்சி ஸ்ரீசுப் பிரமணிய வித்தியாசாலை அதிபர் சு.தர்மலிங்கம், வரணி மகா வித்தியாலய ஆங்கில ஆசியரும் சமாதான நீதிபதியுமாகிய செ.நவரட்ணசாமி மற்றும் ஆயுள் வேத வைத்தியர் திருமதி சிவசுதன் ஆகியோர் கலந்து கொள்வர்.(204-170)

மேசைப் பந்தாட்டம்

மக்கள் வங்கியின் வட வலய அலுவலகத்தின் அனுசரணையுடன் யாழ்.மத்திய கல்லூரியின் உள்ளரங்க விளையாட்டுக் கழகம் நடத்தும் டாக்டர் டி.ரி.நைல்ஸ் ஞாபகார்த்த மேசைப் பந்தாட்டப் போட்டி நாளையும் நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் பி.ப. 4 மணி வரை யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறும் என இணைப்பாளர் ஜே. மோகன் தெரிவித்துள்ளார். (ஒ-190)

மரண அறிவித்தல்

திருமதி இரத்தினம் சீனித்தம்பி

பெருமாள் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சீனித்தம்பி அவர்கள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீனித்தம்பியின் அன்பு மனைவியும் பத்மலோஜினி, சுபாஜினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் கனகலிங்கம் (முத்தையா மோட்டோர்ஸ்ரோர்ஸ்), செல்வநாயகம் (சுவிஸ்) ஆகியோரின் மாமியாரும் திலீப்குமார் (பிரான்ஸ்), ரேணுகா (பிரான்ஸ்), தர்மகுமார் (ஜேர்மனி), நித்தியவாணி (ஜேர்மனி), திருலோக்குமார் (பிரான்ஸ்), பிரபா (பிரான்ஸ்), நவநீதகுமார் (நவம் தையலகம்), சிவலோகநாயகி , சஞ்சாய் (சுவிஸ்), சுதர்சினி (சுவிஸ்), சாந்தஜிவன் (சுவிஸ்) ஆகியோரின் பேர்த்தியும் கௌதம் (பிரான்ஸ்), நிரோஷன் (பிரான்ஸ்), வினோத் (பிரான்ஸ்), கஜந்தினி (ஜேர்மனி), கஜந்தன் (ஜேர்மனி), காயத்திரி (ஜேர்மனி), கீர்த்தன் (ஜேர்மனி), சரண்ஜா, திவ்வியா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
த.கனகலிங்கம்.

(57069)(32-17-11)

எமது தாயக மண்ணில் நூறுவீதம் செய்முறைப் பயிற்சியுடன் எமது மாணவர்களும் கணனித்துறையில் பாரிய விற்பனர்கள் ஆக வேண்டுமென்ற கனவை நினைவாக்கும் நோக்குடன் சிறந்த செய்முறைப் பயிற்சிக்கூடத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

நாங்கள் யார்?

- இந்தியாவை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுபவர்கள்.
- இந்திய பொறியியல் துறையில் எலக்ட்ரோனிக்ஸ் அன்ட் கொமுனிக்கேசன் துறையில் சிறப்புப் பட்டம் பெற்றவர்கள்.
- 2 தசாப்த காலமாக இந்திய மற்றும் உலக முன்னணி நிறுவனங்களில் வேலைசெய்து அனுபவம் பெற்றவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான IBM, Compaq, Dell, Bell Labs, Dlink, Link sys, Microtek, Cisco மற்றும் Gateway போன்ற நிறுவனங்களுடன் இணை Hardware & Network பொருட்கள் தயாரிப்பில் பாரிய பங்காற்றியவர்கள்.
- உலக முன்னணி நிறுவனங்களான Microsoft, Sun microsystems, Lotus Intl, AT& T Labs, SCO, Oracle மற்றும் Infosys நிறுவனங்களுடன் மென்பொருள் இணைத் தயாரிப்பில் ஈடுபட்டவர்கள்.
- கடந்த ஒரு வருடகாலமாக UNIT நிறுவனமூடாக கணனி உதிரிகள், வலைப் பின்னலமைப்பிற்கான உதிரிகள் மற்றும் அதற்குரிய சேவைகளையும் வழங்கிக் கொண்டிருப்பவர்கள்.
- கடந்த ஆண்டில் தாயக மண்ணிலுள்ள சில கணனிக்கல்லூரிகள் மூலமாக ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியவர்கள்.

கணனிக் கல்வியில் எமது முதல் கல்

- ஏட்டுச்சுரைக்காய் உதவாது, செய்முறைப் பயிற்சி இல்லாமல் இன்றைய கணனிமய உலகில் எந்த ஒரு செயலாற்றலும் முடியாது என்பதை அனுபவ ரீதியாகப் புரிந்து கொண்டு கூடுதலான செய்முறைப் பயிற்சியுடன் கூடிய ஆய்வுகள் செய்யக்கூடிய ஒரு பயிற்சிக் கூடமாக முதல் படியாக Hardware மற்றும் Network சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொள்வதற்காக எமது முதலாவது அய்வு கூடத்தை அமைத்து பிரத்தியேகமாக Hardware மற்றும் Network கணனிக் கற்கை நெறியினை ஆரம்பிக்கவுள்ளோம்.
- உலக அளவில் எந்தவொரு பயிற்சிகளை ஆரம்பிக்கும்போது அதற்குரிய பயிற்சிகளைப் பழகுவதற்கு தொழிற்கூடம் தான் முதலில் அமைப்பார்கள். அந்த வழியில் Hardware & Network சம்பந்தமான எமது தொழிற்கூடம் கடந்த ஒரு வருடகாலமாக சிறந்த பங்காற்றியது மட்டுமல்லாமல் மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்றுள்ளது.
- விரிவுரைகள் யாவும் இந்திய பொறியியல் துறையில் சிறப்புப் பட்டம் (Electronics & Communication) பெற்று இரண்டு தசாப்த காலம் இந்திய கணனித்துறையில் அனுபவம் பெற்றவரும் இன்று தாயக மண்ணில் Hardware மற்றும் Network துறையில் முன்னணி விரிவுரையாளரால் செய்முறைப் பயிற்சியுடன் நடாத்தப்படும்.
- ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாக செய்முறைப் பயிற்சிகள் செய்வதற்கு தனித்தனி நேர அலகு ஒதுக்கப்படுகிறது.
- மட்டுப்படுத்தப்பட்ட அளவுகளிலேயே ஒவ்வொரு மாணவர்களும் அனுமதிக்கப்படுவார்கள்.

Our Field Offices: UNIT, India. Aram Menporulagam, India. Zensoft, Malaysia. Zensoft, USA. WinCisco Labs, Canada.

பயிற்சிகள் பற்றிய விபரங்களுக்கு தொடர்பு நிர்வாகம்

UNIT Education
16/1, Killnar Lane,
Jaffna.
Also: Jaffna Hindu College,Opp Lane to PandiKottu Pillayar Kovil, K.K.S. Road. Opp Lane to Velankanni Church, Kasthuriyar Road, Jaffna.

Free Course Material

100% JOB ASSISTANCE
Inauguration Offer
இன்று Admission எடுப்பவர்களுக்கு
50%
பயிற்சிக்கட்டண கழிவு வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 ஆம் ஆண்டு நினைவுப் பூக்கள்

மலர்வு 23 - 12 - 1948 | உதிர்வு 19 - 01 - 2004

அமரர் **முருகர் கந்தையா**

(நில அளவைத் திணைக்கள உத்தியோகத்தர்)

நிழலாக நீயிருந்த காலத்தை
நினைத்து ஏங்குகின்றோம்
நிழலிழந்து இரண்டு ஆண்டுகள் ஆனதுவே
எங்கள் தெய்வத்தின் ஆத்மா
சாந்திபெற வேண்டுகின்றோம்.

கரவெட்டிமேற்கு,
கரவெட்டி. (57090) மனைவி, மக்கள்.

நீங்காத நினைவில் வருடங்கள் ஆறு

மலர்வு 15 - 04 - 1933 | உதிர்வு 27 - 01 - 2000

அமரர் **சின்னக்குட்டி குண்டுமணி**

காலங்கள் பல சென்றாலும்
காவியங்கள் மறைவதில்லை
ஆண்டுகள் ஆறு ஆனபோதும்
ஆறவில்லை எம் நெஞ்சங்கள்

"குண்டுமணி நிவாஸ்"
கலைமகள் வீதி,
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி. (46002) குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்கள்

கந்தசாமி திருநடராஜா

(பல் வைத்தியர், ஆதாரவைத்தியசாலை, வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி திருநடராஜா அவர்கள் 25.01.2006 அன்று அகாலமரணமானார்.

அன்னார் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தசாமி (Postmaster) -ராசம்மா தம்பதியரின் இளைய மகனும் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம்-மாவேந்திராணி தம்பதியரின் மருமகனும் திருமதி பாலேந்திராணியின் அன்புக் கணவரும் அமுதா (லண்டன்), வளர்மதி (ஆசிரியை), மேனகா (ஆசிரியை) அவர்களின் அன்புத் தந்தையும் பாஸ்கரின் மாமனாரும் சிவாஷினியின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2006) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் ஊறணி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பருத்தித்துறை வீதி,
வல்வெட்டித்துறை. (57087) தகவல்: மனைவி, பிள்ளைகள்.

விநாசித்தம்பி சோமசுந்தரம்

(பிரபல தொழிலதிபர், கொட்டடி மரக்காலை
CITY HARDWARE, CITY STEELS, STANLY ROAD, JAFFNA.
CITY TRANSPORT SERVICE CENTRAL, ROAD, COLOMBO-12.
பங்காளர் S.அருணாச்சலம் செட்டியார் அன்சன்ஸ், 165, 5ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு-11)

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 119, பிறவுண் வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் தற்போது கொழும்பு 26/5, லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டியில் வசித்தவருமாகிய பிரபல தொழிலதிபர் விநாசித்தம்பி சோமசுந்தரம் அவர்கள் 25.01.2006 அன்று காலமானார்.

அன்னார் சிறிதேவியின் (நாகம்மா) அன்புக் கணவரும் கேதீஸ்வரன் (சுவிஸ்), ஆனந்தகௌரி (சுவிஸ்), ஜெகதீஸ்வரன், பிரகதீஸ்வரன், மனோகௌரி (கனடா), அமிர்தகௌரி (ஆசிரியை), ஜெயகௌரி (சங்கீத ஆசிரியை, சைவப்பிரகாச வித்தியாலயம், வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வி நீதிராஜா, சகி, சந்திரா, ரூபசாந்தன், யோகமோகன் ஆகியோரின் அன்பு மாமனும் சஜானி (கண்ணம்மா), தினேஸ், திருஷா, கருஷன், சஞ்சயன், ஆதித்தன், ஆரணியன், அருண், பிரவீனா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களாகிய சிவபாக்கியம், ஆறுமுகம், காராளபிள்ளை, பசுபதிப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சின்னத்தங்கம், நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற கந்தையா (ஆசிரியர்) மற்றும் சறோஜினி இரத்தினம், இராசமணி முத்தையா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 29.01.2006 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு அவரின் இல்லத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணிக்கு பொரளை இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

No. 26/5, LOURES ROAD,
BAMBALAPITYA.
T.P.: 2589701. (57092) தகவல்: மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
C/MATHS Mr.M.Karthi
07-நிகழ்தகவு, சமனிலி | 06-சிக்கல் எண்
CHE.-Mr. மகிழ்னன்
PHY.-Mr. கபிலன் (சி-47537)

ஆவண உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
நுண்ணறிவு / பொது அறிவு } த.தவசேகர் B.Sc.P.G.D.E, P.G.D.P.
மொழியும் கிரகிப்பும் : பா.மகாலிங்கசிவம் BA. (Hons)
மாசி மாதத்தில் நடைபெற இருக்கும்
இப்பரீட்சைக்கான வகுப்புகள் D.M.I. யாழ். நகரில்
சனி, ஞாயிறு 11.30 - 1.30 (57091)

கணனி இயக்குநர் தேவை
அச்சகத்தில் கணனி இயக்குநராகப் பணி புரிந்த அனுபவமுள்ள கணனி இயக்குநர் தேவை. திறமைக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு:
பிள்ளையார் அச்சகம்,
(57084) நல்லூர்.

தேவை
யாழ். நகரில் இயங்கும் பிரபல்யமான அச்சகத்திற்கு Page Maker, Coral Drow, Photo Shop தெரிந்தவர்கள் உடன் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். அச்சக வேலைகளில் முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.
தொடர்பு: விளம்பர இல. 2795.
(சி-47541) மே/பா. உதயன்.

Refresh SYSTEM
புதிய, பழைய கணனிகள் வீட்டில் வந்து திருத்திக் கொடுக்கப்படும். அத்துடன் Video editing, Photo editing, DVD, CD write செய்துகொடுக்கப்படும்.
தொடர்பு: சுதுமலை, மானிப்பாய்.
0776 279671, 0773 253104 (57082)

மரண அறிவித்தல்

வீரசிங்கம் நவரத்தினம்

ஏழாலை தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் நவரத்தினம் அவர்கள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் கோயிலடி,
சூராவத்தை,
சுன்னாகம். (57100) தகவல்: குடும்பத்தினர்.

நாதன்ஸ் யாழ்ப்பாணம்
பொங்கல் வெளியீடு
அல்டிமேட் அஜித், லைலா மற்றும் பலர் நடித்த
பரமசிவன்
காட்சி நேரம்:
10.30, 2.30

மனோகரா யாழ்ப்பாணம்
அதிரடி பொங்கல் வெளியீடு
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
(Dts நவீன ஒலிநயத்துடன்)
ஆதி

இளைய தளபதி விஜய், த்ரிஷா மற்றும் பலர் நடிப்பில்
(வருகிறான் வரிப்புலி நாதியாய்)
தயாரிப்பு : S.A. சந்திரசேகர்
இசை : வித்தியாசாகர்
இயக்கம் : பரணி
திரைசரி: பு.நே. 10.30, 1.30, 4.30, 7.30

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு, ஜோதிகா, பிரகாஷ்ராஜ் நடித்த
சரவணா

இயக்கம்: K.S.ரவிக்குமார்
ரிக்கற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
காட்சிநேரம்:
பு.நே. 10.30, 2.15 மட்டும்

நாகம்ஸ் சுன்னாகம்
சூர்யா, திரிஷா, வடிவேல் நடித்த
ஆறு

திரைசரி:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறந்ததின வாழ்த்து

செல்வி அமீனா

நோர்வேயைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி அமீனா மகாலிங்கம் தனது 6ஆவது பிறந்த தினத்தை இன்று (27.01.2006) வெள்ளிக்கிழமை நோர்வேயில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, ஆசை அண்ணா, நோர்வே அம்மம்மா, அம்மப்பா, அன்ரா, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அப்பப்பா, அப்பம்மா, சந்திரிக்கா மாமி, மாமா, கீதா மாமி, மச்சான்களான ரமணன், கீர்ஜன் ஆகியோர் சாயி அருளால் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

(57098) க.மகாலிங்கம் (அப்பப்பா).

மரண அறிவித்தல்கள்

வேதாரணியம் குமாரவேல்

(உரிமையாளர் V.C.L. ENGINEERING WORKS COLOMBO-15)

மடத்தடி, மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகத்தை வதிவிடமாகவும் தற்போது மட்டக்குளி, கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட வேதாரணியம் குமாரவேல் அவர்கள் 25.01.2006 புதன்கிழமை காலாமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேதாரணியம் - செல்வம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் பத்மினியின் அன்புக் கணவரும் ஜசிந்தா, ரகனிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் கருணாநிதியம்மாவின் சகோதரனும் மகாலிங்கம் காலஞ்சென்ற ஞானேஸ்வரி செல்லத்துரை மற்றும் நாகேஸ்வரி ஆகியோரின் மருமகனும் பாலச்சந்திரன், கேதீஸ்வரன், காங்கேயவாணி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற சபாரத்தினம் மற்றும் மகேஸ்வரி தம்பதியரின் பெறாமகனும் ஜெயபாலன், புனிதவதி, ஜெயசாந்தன், ஜெயமணி, ஜெயறஞ்சினி, ஜெயகுமார், கலியாணி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரனும் சந்திரதாஸ், சஜிதா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 29.01.2006 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாதம்பிட்டிய மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

98/6, சேச்றோட்,
மட்டக்குளி, கொழும்பு-15
T.P.: 0112527359 (57083) தகவல்: குடும்பத்தினர்.

சுப்பையா அன்னப்பிள்ளை

காரைநகர், இலகடியைப் பிறப்பிடமாகவும் ஓட்டுமடம் சேச் லேனை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா அன்னப்பிள்ளை அவர்கள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - இலட்சுப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரியும் காலஞ்சென்ற ராசம்மா, காலஞ்சென்ற அருணாசலம் மற்றும் நாகேஸ்வரி (கொழும்பு), மகேஸ்வரி (யாழ்ப்பாணம்), அன்னலட்சுமி (கொழும்பு), சிவலிங்கம் (U.K.), கனகேஸ்வரி (பிரான்ஸ்), அம்பிகை (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற பாக்கியம் காலஞ்சென்ற கந்தையா (விற்பனைத் திணைக்களம்) ஆகியோரின் சிறியதாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2006) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சேச் லேன்,
ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (57079) தகவல்: இ.நடராசா (பெறாமகன்).

கந்தர் பொன்னுத்துரை

கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் பொன்னுத்துரை அவர்கள் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தர் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும் அப்பாப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளையின் அன்புக் கணவரும் நடராசா, அன்னப்பிள்ளை, தெய்வேந்திரம் (கொழும்பு), இந்திரா (கனடா), இராசலட்சுமி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜேஸ்வரி, நவரத்தினம், சோதிமலர் (ஜேர்மனி), ஜெயராசா (கனடா), ஜெயக்குமாரன் (ஹொலண்ட்) ஆகியோரின் அன்பு மாமனும் இந்திரவேணி- சிவேந்திரன் (ஹொலண்ட்), பிருந்தா, அன்பரசி - கேதீஸ்வரன் (சித்த வைத்தியர்கள், கைதடி, கரவெட்டி), வித்யா (கனடா), விஜயந்தினி - விஜயபாலன் (கனடா), கோபிகா (கனடா), விபித்திரா (ஜேர்மனி), ஜனார்த்தனன் (ஹொலண்ட்), சயந்தனன் (ஹொலண்ட்), சுபஸ்திகா (ஜேர்மனி), விபூஷணன் (ஜேர்மனி), அபிராமி (ஹொலண்ட்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2006) வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அப்பிளானை,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (57097) தகவல்: சி.நவரத்தினம் (மருமகன்).

ஊர்காவற்றுறை மினிபஸ் சங்க அலுவலகம் நொருக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஊர்காவற்றுறைப் பகுதியில் அமைந்துள்ள தனியார் மினிபஸ் சங்கத்தின் அலுவலகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் அடித்து நொருக்கப் பட்டுள்ளது.

தனியார் மினிபஸ் சங்கத்தின் அலுவலகம் மற்றும் அதன் அருகில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தில் வைக்கப்பட்டிருந்த சொரூபம் என்பன அடித்து நொருக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக மினிபஸ் சங்கத்தினர் ஊர்காவற்றுறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். (3-7)

கோப்பாய் கோட்டத்தில் விளையாட்டுப் பொறுப்பாளர் கூட்டம் இன்று

கோப்பாய்,ஜன.27

கோப்பாய் கோட்ட பாடசாலை விளையாட்டுப் பொறுப்பாசிரியர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கூட்டத்திற்கு வருகை தரும்போது விளையாட்டுகளில் பங்குபற்றும் அணிகளின் விவரங்களையும் எடுத்துவருமாறு கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (3-72)

அமெரிக்கா, ஐ. நா. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கா வலியுறுத்தியிருக்கிறது.

இது தொடர்பில் வாஷிங்டனில் கருத்து வெளியிட்டிருக்கும் அமைரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் சீன் மெக்கெமர்க், அரசும் புலிகளும் பேச்சுகளை ஆரம்பிப்பதன் மூலமே பிரச்சினைக்கு முடிவு கட்டலாமென்றும், புலிகள் வன்முறைகளையும், தீவிரவாதத்தையும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்துவதை நிறுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார். இலங்கையின் அமைதி முயற்சிகள் குறித்து நியூயோர்க்கில் கொபி அனானின் பேச்சாளார் ஸ்ரீபன் டுஜேரிக் அறிக்கை யொன்றை விடுத்துள்ளார். அந்தஅறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளதாவது:-

நோர்வே அரசாங்கத்தின் முயற்சியினால் பெப்ரவரி மாத நடுப்பகுதியில் இலங்கையின் அமைதிப் பேச்சுகள் மீண்டும் தொடங்கவுள்ளன. 2003ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் அமைதிப் பேச்சுகள் முறிவடைந்த பின்னர் நடத்தப்படும் முதல்வாது நேரடிப் பேச்சு இதுவாகும்.

தற்போது மேற்கொள்ளப்படும் விரைவான அமைதி முயற்சிகளின் மூலம் தற்போது இலங்கையின் வடக்கு - கிழக்கில் அதிகரித்துவரும் வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். போர்நிறுத்த ஒப்பந்தத்தை முழு அளவில் நடைமுறைப் படுத்த வேண்டும்.

வெகு விரைவில் அமைதித்தீர்வு ஏற்படுமென்ற புதிய நம்பிக்கை இலங்கை மக்களிடம் ஏற்பட்டுள்ளது. -இவ்வாறு அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது (க-3)

சமாதான முயற்சி தொடங்கி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையில் ஆரம்பிக்கத் தொடங்கியபொழுது அரை வருட காலத்துக்குள் என் பணியை ஒப்பேற்றிவிடலாம் என்று நினைத்தேன். ஆனால், இப்படி காலம் நீண்டுகொண்டே போகும் என்று எதிர்பார்க்கவில்லை.

''இந்தப்பணியில் பொறுமை எனக்கு அதிகம் தேவைப்பட்டது. இன்னும் அத்தேவை உள்ளது. ஒரு சில மாதங்களுக்குள் எதுவும் தீர்ந்துவிடப்போவதில்லை.

இருதரப்பிற்கும் மத்தியிலுள்ள சிரேஷ்ட கீழ் மட்ட உறுப்பினர்களின் (அவர்களின் தலைவர்களையல்ல) தயவைத் திருப்திகரமாக பெறுவதன் மூலம் யுத்த நிறுத்த உடன் படிக்கையின் அமுல் பற்றி சந்தித்துப் பேசுவதற்கு இரு தரப்பினரையும் இணங்க வைத்திருக்கிறேன்.

கடந்த சில மாதங்களாக நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. ஆனால், இப்பொழுது சரியான திசை நோக்கி அடி எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தருணத்தை இரு தரப்பினரும் வன்செயல்கள் மற்றும் கொலைகளை நிறுத்துவதற்கான வழி வகைகளை காண்பதற்கு பயன்படுத்தி, அதனை அத்திபாரமாகக்கொண்டு தீர்வை நோக்கி நெருங்க வேண்டும்.

நாட்டில் சமாதானம் மலரவேண்டுமென்பதில் காணப்படும் ஆர்வமும், உற்சாகமும் பொது இணக்கப்பாடொன்று எட்டப்பட வேண்டிய விஷயதானங்களில் காணப்படவில்லை. பொது இணக்கப்பாட்டுக்கு வர வேண்டிய விஷயங்கள் பற்றி நான் ஆலோசனை கூறமுடியாது. அது ஒரு சிக்கல்வாய்ந்த சங்கதி.

சமாதான முன்னெடுப்புகளுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய அல்லது நாசம் உண்டுபண்ணக் கூடிய சில சக்திகள் செயல்படக் கூடிய அபாயமும் உண்டு.

ஆக்கபூர்வமாக நாங்கள் எடுத்திருக்கும் முயற்சியை முறியடிப்பதற்கு சில விஷமிகள் வன்செயல்களைத் தூண்டிவிடவும் கூடும். எனவே, அரசும், புலிகளும் வன்செயல்களை நிறுத்துவதற்கு தங்களால் இயன்ற எல்லாவற்றையும் செய்யவேண்டும். சமாதான முயற்சிகளைத் தடம்புரள வைக்க முயலும் சக்திகளுக்கு இடமளிக்காத முறையில் இரு சாராரும் பார்த்துக்கொள்ளவேண்டும். - என்றார். (க-3)

முஸ்லிம்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயப்படுத்தப்பட்டனர். பல கடைகள் அடித்து நொறுக்கப்பட்டுள்ளன. இதனால் நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டதோடு பொலிஸார் கலவரத்தை அடக்குவதற்காக உத்தியோகப் பற்றற்ற ஊடரங்குச் சட்டத்தை நடைமுறைப் படுத்தினர்.

இதனால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கினர். நகரில் கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. மூன்று முஸ்லிம் பாடசாலைகள் இயங்கவில்லை.

நேற்று முன்தினம் இரவு சிங்கள எல்லைப் பகுதிகளின் ஊடாகப் பயணம் செய்த முஸ்லிம்களை சிங்களக் காடையர்கள் சிலர் வழிமறித்துக் கூரிய ஆயுதங்களினால் தாக்கியுள்ளனர். முஸ்லிம்களின் வீடுகளையும் கல்லெறிந்து தாக்கியுள்ளனர்.

விடிந்ததும் - அதாவது நேற்றுக்காலை - பேருவளை சிங்களப் பகுதிகளில் அமைந்துள்ள முஸ்லிம்களின் வியாபாரத் தளங்களையும் சிலர் அடித்து நொறுக்கியுள்ளனர். அங்கிருந்த முஸ்லிம்களும் தாக்கப்பட்டனர்.

முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான பேக்கரி ஒன்றும் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தர்கா நகரில் அமைந்துள்ள சிங்களவர்களுக்குச் சொந்தமான மூன்று கடைகள் மீது முஸ்லிம் இளைஞர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனையடுத்து இரண்டு தரப்புகளுக்கும் இடையில் கலவரம் - களேபரம் - ஏற்பட்டது. நகருக்குள் விரைந்து வந்த பொலீஸார் கலவரத்தை அடக்குவதற்காக ஊடரங்கு சட்டத்தைப் பிறப்பித்தனர். (க-3)

புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்பட்டிருக்கின்றது.

இத் தாக்குதலில் கொல்லப்பட்டவர் மேஜர் கபிலன் என்று தெரிவித்திருக்கும் புலிகள், இலங்கை இராணுவத்தின் வெலிகந்தையிலுள்ள 23ஆம் படைப்பிரிவின் முகாமிலிருந்து மோட்டார் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் கூறியிருக்கின்றனர்.

அதிரடித்தாக்குதல் நடத்திய தமது குழுவினரைப் பாதுகாப்பாகத் தமது முகாமுக்கு மீட்பதற்காக வெலிகந்தை முகாமிலிருந்து ஐந்து அங்குல மோட்டார்கள் கொண்டு தமது பிரதேசத்தை நோக்கி வெலிகந்தை முகாமிலிருந்து கடும் தாக்குதல் நடத்தப்பட்டதாகப் புலிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, நேற்றைய இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டித்திருக்கும் புலிகளின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் எஸ். புலித்தேவன், போர் நிறுத்த உடன்பாடுகளை மீறி அரசு இரட்டைவேடமிடுவதாகக் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வன்முறைகளைக் கைவிட்டு, சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு வசதியாக அமைதி நிலை பேணுவதற்கு உறுதி பூண்டு அதைப் புலிகள் அறிவித்துள்ள சூழலில் -

ஏற்கனவே, தடுத்து வைக்கப்பட்டிருந்த பொலீஸாரில் ஒருவரை விடுவித்து நல்லெண்ணத்தைப் புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்ற சமயத்தில் -

கிழக்கில் இராணுவ முகாம்களிலிருந்து புலிகள் மீது இவ்வாறான மோட்டார் தாக்குதல் நடத்தப்படுவது குறித்துப் புலித்தேவன் கடும் விசனத்தை வெளியிட்டார்.

அமைதிப் பேச்சுகளை ஜெனீவாவில் நடத்துவதென்று நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக அரசும், புலிகளும் இணக்கப்பாடொன்றுக்கு வந்து 24 மணிநேரத்தினுள் நடத்தப்பட்டுள்ள இந்தத் தாக்குதல் பேச்சுக்கு முன் இரு தரப்பு நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கு உதவாதென்றும் புலித்தேவன் மேலும் தெரிவித்திருக்கிறார்.

இந்தத் தாக்குதல் குறித்து தற்போது கொழும்பில் இருக்கும் நோர்வே அனுசரணைக்குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம், நோர்வேத் துதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர், கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரின் கவனத்துக்குப் புலிகள் கொண்டுவந்திருக்கின்றனர்.

இந்தத் தாக்குதலை இராணுவப் பேச்சாளர் மறுத்துரைத்திருக்கின்றார். (க-3)

செய்தியாளர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அஞ்சலி செலுத்தினர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரச பொதுச் சேவைகள் சங்கம், அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம், அம்பாறை மாவட்ட மிக்ஸ் மீடியா போரம், தென்கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கம், இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் பிரதிநிதிகள் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டனர்.

இதேவேளை, சுகிர்தராஜன் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை நடத்திவரும் பொலீஸார் பலரின் வாக்கு மூலங்களைப் பெற்றிருக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

வெடிபொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

அக் கப்பலில் இருந்த ஐவரைக் கைது செய்த கடற்படையினர் அவர்களைப் பொலீஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (3)

நல்லெண்ணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டுப் பகுதிக்குள் ஊடுருவினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று ஸ்ரீலங்கா பொலீஸார் புலிகளால் கைதுசெய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தால் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை விடுதலை செய்யுமாறு நோர்வே அமைச்சரும், சமாதானத் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனிடம் கேட்டிருந்தார்.

நல்லெண்ண நடவடிக்கையாக மூன்று பொலீஸாரில் ஒருவரான சரத் என்பவரை விடுவிக்க பிரபாகரன் முடிவுசெய்தார்.

நேற்றுக்காலை 7.30 மணியளவில் பிரஸ்தாப பொலீஸ் கான்ஸ்டபிள் கிளிநொச்சி நீதியாளர் சாதனா முன் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலை செய்யப்பட்ட கான்ஸ்டபிள் புலிகளின் சமாதான செயலகம் ஊடாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கையளிக்கப்பட்டார்.

அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் பிரஸ்தாப கான்ஸ்டபிளை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அதிகாரிகளிடம் கையளித்தார். (க-3)

உள்ளூராட்சி சபைகளுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுக்கள் தமது கட்டுப்பணத்தை 15ஆம் திகதி நண்பகல் வரை செலுத்தலாம் என்றும் தேர்தல் செயலகம் அறிவித்திருக்கின்றது.

கொழும்பு மாவட்டத்தில் வேட்பு மனுக்கள் மற்றும் கட்டுப்பணம் என்பன ராஜகிரியவிலுள்ள பிரதான தேர்தல் செயலகத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் சம்பந்தப்பட்ட தேர்தல் செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மூலம் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய முடியும். இது தொடர்பான அறிவித்தல்கள் மாவட்டத் தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிகள் மூலம் நேற்றுமுதல் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன எனத் தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூலம் வாக்களிப்போர் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்றும் தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்தார்.

இதற்கு முன்னர் 2002ஆம் ஆண்டு முற்பகுதியில் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ளூராட்சித் தேர்தல்கள் நடத்தப்பட்டபோது வடக்கு - கிழக்கிலும் தேர்தல்களுக்கு வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. அப்போது அமைதி முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட பின்னணியில் இந்தத் தேர்தல்களை வடக்கு - கிழக்கில் நடத்தாமல் ஒத்திவைக்கும்படி தமிழர் தரப்பிலிருந்து அழுத்தம் கொடுக்கப்பட்டது. அதனால், வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அங்கு இத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டன. காலத்துக்குக் காலம் இந்த ஒத்திவைப்பு உத்தரவு காலநீடிப்புச் செய்யப்பட்டு வந்தது.

எனினும், பின்னர் இடையில் முஸ்லிம் தரப்பிலிருந்து கிடைத்த அழுத்தம் காரணமாக கிழக்கில் முஸ்லிம் பிரதேசங்களில் தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களுக்கு அமைய அத்தேர்தல்களை அரசு நடத்தியது.

நாட்டில் ஏனைய பிரதேசங்களில் 2002இல் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் ஆயுட்காலம் முடிவடைவதை ஒட்டி புதிய தேர்தல்களுக்கு ஏற்பாடுகள் செய்யப் படுகின்றன.

இந்நிலையில் 2002 இல் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, இவ்வருட முற்பகுதிவரை ஒத்திவைக்கப்பட்டு வந்த வடக்கு - கிழக்கு உள்ளூராட்சி சபைகள் தொடர்பாக கடந்த 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட சட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. இதன்படி ஏற்கனவே ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் ரத்துச்செய்யப்பட்டன. அதன்மூலம் புதிதாக வேட்புமனுக்களைக் கோரி உள்ளூராட்சித் தேர்தல்களை வடக்கு - கிழக்கில் நடத்துவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது.

அதற்கமைய, நாட்டின் ஏனைய இடங்களுடன் சேர்ந்து வடக்கு - கிழக்கிலும் உள்ளூராட்சிசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு ஏதுவாகத் தற்போது வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன. இதற்கான உத்தியோகபூர்வ அறிவிப்பு இப்போது வெளியாகியிருக்கின்றது.

எனினும், ஏற்கனவே அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் அமைதிப் பேச்சுகளை மீண்டும் ஆரம்பிக்கக்கூடிய சூழல் இப்போது உருவாகியிருப்பதால் -

அதைக் குழப்பும் வகையில் உள்ளூராட்சித் தேர்தல்களை இப்போதைய நிலையில் வடக்கு - கிழக்கில் நடத்த வேண்டாம் என்ற அழுத்தம் தமிழர் தரப்பிலிருந்து வெளிப்படக்கூடிய வாய்ப்புகள் தென்படுகின்றன.

அமைதிப் பேச்சகளை நடத்துவதற்கான சூழ்நிலை கெடுவதைத் தவிர்க்கும் நோக்குடன் இந்தத் தேர்தலை வடக்கு - கிழக்கில் நடத்தாமல் இப்போதும் ஒத்திவைப்பதற்கு அரசு இணங்கக்கூடும் என எதிர்பார்க் கப்படுகின்றது.

ஆயினும் -

வேட்புமனுக்கள் உத்தியோகபூர்வமாகக் கோரப்பட்டுவிட்டதால் அவை ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னரே அத்தேர்தல்கள் முன்னைய நிலைமை போன்று ஒத்திவைக் கப்பட வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக் கதாகும். (க-3)

மரண அறிவித்தல்

கந்தையா கணேசலிங்கம்

(திட்டப் பணிப்பாளர் கெயர் சர்வதேசம், முல்லை மாவட்டம்)

இளைவாலை, சித்திரமொழியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்டவரும் கெயர் சர்வதேசம் முல்லைத்தீவு திட்டப்பணிப்பாளரும் ஆகிய கந்தையா கணேசலிங்கம் நேற்று (26.01.2006) வியாழக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கெயர் சர்வதேசம்,
வன்னி.

(சி-47542)

NEW SCIENCE COLLEGE
பௌதிகவியல்
2007 வெப்பவியல்
Tue,Thu.-3-4 (SLT)
அலைகளும் அதிர்வுகளும்
Mon.Wen-3-4.(SLT)
ஆரம்பம்: 30.01.2006
2008 பொறியியல்
Sat,Sun.-7- 8 (SLT)
ஆரம்பம்: 28.01.2006
By: M. கருணாநிதி (B.Sc)

ஆவண உதவியாளர் போட்டிப் பரீட்சை வகுப்புகள்
ஆரம்பம்: 28.01.2006
சனி காலை 9 மணி
சனி, ஞாயிறு 9-12 மணி
50 மணித்தியாலங்கள்
நியூட்டன் ஆரியகுளம் சந்தி
(D.C.S)
அருகாமை யாழ்நகர்.

கணனித்துறையில்
எமது தாயக மண்ணில் ஓர்
விடிவெள்ளி
10 பக்கம் பார்க்க

விஜய
கல்வி நிறுவனம்
A/L Day Class
PAPER CLASS
தமிழ்
திரு. குழந்தை (10.30)
அல்ஜெபரியல்
திரு. ஜெயந்தன் (11.30)
ஆரம்பம்: 30.01.06

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியிலும் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.01.2006இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org